Follow us

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 482 பிலவ வருடம், பங்குனி மாதம் 04ஆம் திகதி வெள்ளிக்கிழமை (18.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 14, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## தேசிய வைத்தியசாலையில் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு

விறகு அடுப்புகளில் சமைக்க ஏற்பாடுகள் தீவிரம்

02 பக்கம்



## இன்றுமுதல் எரிவாயு விநியோகம்

லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

02 பக்கம்

## 30 வீத தனியார் பஸ்களே சேவையில்

## இன்று மேலும் குறைவடையும்



•நா.தினுஷா

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நாடு முழுவதும் 30 வீதமான தனியார் பஸ்களே சேவையில் ஈடுபடுவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்ததுடன், எதிர்வரும் நாட்களில் அந்த எண்ணிக்கை மேலும் குறைவடையும் என சுட்டிக்காட்டியது.

டீசல் பெற்றுக்கொள்ள தொடர்ந்தும் முடியாமல் போனால் இன்று பஸ் சேவைகள் மேலும் குறைவடையும் என அகில இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். டீசல் இல்லாததால் நேற்றுமுன்தினம் பயணிகளை ஏற்றிச்சென்ற தனியார் பஸ்கள் பல வீதிகளில் நிறுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நாடு முழுவதும் தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை போக்குவரத்துச் சபையினூடாக எரிபொருள் பெற்றுத்தருவதாக உறுதியளிக்கப்பட்டபோதும் அவ்வாறு எமக்கு வழங்கப்படவில்லை.

தொழில் மற்றும் ஏனைய தேவைகளுக்காக பயணிகள் பஸ் இல்லாமல் சிரமப்படுவதை நாம் காண்கிறோம். எனினும் எங்களால் பஸ் சேவையை முன்னெடுத்துச்செல்ல முடிய வில்லை என்றார்.



## மட்டக்குளியில் மண்ணெண்ணெய்க்கு வரிசை...





# டொலர்களை அனுப்பமாட்டோம்!

## புலம்பெயர் இலங்கை அமைப்பு தீர்மானம்

நமது விசேட செய்தியாளர்

இலங்கையில் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகள் ஆட்சிசெய்வதாக குற்றஞ்சுமத்தியுள்ள வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள், நெருக்கடி நிலைமைக்கு காரணமானவர்கள் பதவி விலகும்வரை டொலர்களை நாட்டுக்கு அனுப்பப் போவதில்லையென தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் 'மாற்றத்துக்கான புலம்பெயர்ந்த இலங்கையர்கள்' என்ற பெயரில் இயங்கும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. 02 பக்கம்



## "நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கிடையாது"

### அமைச்சர் லொக்குகே கூறுகிறார்

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. எரிபொருள் பவுசர்களின் விநியோக நடவடிக்கையில் காணப்பட்ட சிக்கல் காரணமாகவே சில பிரதேசங்களுக்கு எரிபொருளை விநியோகிக்க முடியாதுள்ளது. நேற்றிலிருந்து செயற்பாடுகள் வழமைபோல் இடம்பெறுகின்றன என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

துறைமுகத்தில் நாளை (இன்று) இறக்கப்படவுள்ள டீசல் தொகைக்கு செலுத்துவதற்கான பணம் எம்மிடம் இருக்கிறது. அதற்கு தாமத கட்டணம் செலுத்தவேண்டிய அவசியமில்லை. அந்தக் கப்பலிலுள்ள டீசல் மற்றும் பெற்றோலை கொலன்னாவைக்கு... 02 பக்கம்




# நெருக்கடியை முன்பே அறிந்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன்?

### ஜனாதிபதியின் உரை தொடர்பில் ஹர்ஷ எம்.பி. சரமாரிக் கேள்வி

02 பக்கம்

## இறக்குமதிப் பொருட்களுக்கு விசேட பண்ட வரி விதிப்பு

### அப்பிள், திராட்சை, பேரீச்சம்பழங்கள் 300 ரூபாவால் அதிகரிக்கும் சாத்தியம்



•யோ.தர்மராஜ்

இறக்குமதி செய்யப்படும் பழங்கள் உள்ளடங்கலாக ஒன்பது பொருட்களுக்கான விசேட பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த வரி அதிகரிப்பு...

» 02 பக்கம்

## இலங்கைக்கு இந்தியா மேலும் உதவிகளை வாரி வழங்கியது

### ஒரு பில்லியன் அமெ. டொலர் ஒப்பந்தம் கைச்சாத்து



02 பக்கம்

## இலங்கை கடற்படையினருக்கு எதிராக சென்னையில் மீனவர்கள் போராட்டம்

•யோ.தர்மராஜ்

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது மற்றும் கொலை செய்யப்படுவதைக் கண்டித்து இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ்நாடு மீனவத் தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தது. அதன்படி, இன்று... 02 பக்கம்





அரசாங்கத்தை சமூக ஊடகங்களில் விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பெண் அறிவிப்பாளர் ஒருவர், நிகழ்ச்சிகளை தொகுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல ஜனாதிபதியை பேஸ்புக்கில் விமர்சித்த ஒருவர், பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஜனநாயகம் பொங்கி வழிகிறது!

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

Dialog எதிர்காலம் இன்றே.

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே | நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09



ஒருகொடவத்தையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நேற்று (17) நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# திறைசேரியிடம் நிதியுதவி கோரியது ரூபவாஹினி

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சம்பளம் மற்றும் ஏனைய அத்தியாவசிய செலவுகளைச் செலுத்துவதற்காக 240 மில்லியன் ரூபாவை வழங்குமாறு திறைசேரியிடம் கோரப் பட்டுள்ளது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம்முதல் எதிர்வரும் ஜூலை மாதம்வரையிலான செலவுகளை ஈடுகட்ட பணம் கோரப்பட்டுள்ளது.

மேலும் கூட்டுத்தாபனத்தின் வருமானம் குறைந்துள்ளதால் சம்பளம் மற்றும் இதர செலவுகளுக்கு போதிய வருவாய் இல்லை என கூட்டுத்தாபனம் திறைசேரிக்கு தகவல் தெரிவித்துள்ளது.

தற்போது அதன் வரவுக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளி சுமார் 65 மில்லியன் ரூபாவாகும்.

கூட்டுத்தாபனத்தில் 900 பேர் பணிபுரிவதுடன், அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு மட்டும் மாதம் 90 மில்லியன் ரூபா செலவிடப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இன்று முதல்...

யோ.தர்மராஜ்

கொழும்பு துறைமுக கடற்பரப்பில் 12 நாட்களாக நங்கூரமிட்டிருந்த இரண்டு எரிவாயு கப்பல்களில் முதலாவது கப்பலிலிருந்த எரிவாயு நேற்று (17) தரையிறக்க ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ள லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க, அதற்கமைய எரிவாயு விநியோகம் இன்று (18) முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

விநியோக நிறுவனத்திற்கு பணம் செலுத்திய பின்னர், இரண்டு கப்பல்களில் முதலாவது இலங்கைக்கு வந்த கப்பலிலிருக்கும் 3 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் எரிவாயுவை தரையிறக்க ஆரம்பித்துள்ளன. இதனால், நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கும் டொலர் தட்டுப்பாடு காரணமாக லிட்ரோவின் கடனுக்கான கடிதத்தை புதுப்பிக்க முடியாதமையினாலேயே எரிவாயு கப்பல்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பணம் செலுத்தியதன் பின்னர் கடன் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும், தங்களிடம் போதியளவான எரிவாயு சிலிண்டர்கள் கையிருப்பில் இல்லாதமையினால் விநியோகத்தை முற்றாக நிறுத்துவதாக நேற்று முன்தினம் (16) லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் நிறுவனங்கள் அறிவித்திருந்தன.

இந்த நிலையில், இரு எரிவாயு கப்பல்களில் ஒன்றிலிருக்கும் எரிவாயுவை தரையிறக்க முடிவதால் இன்று (18) முதல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளது.

## "நாட்டில் எரிபொருள்...

விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் தொகைக்கு 52 மில்லியன் டொலர் செலுத்த வேண்டியுள்ளது. விநியோக நடவடிக்கைகளில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாகவே தற்போது எரிபொருளுக்கு வரிசையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. கடந்த காலங்களில் எரிபொருள் பவுசர்கள் முறையாக விநியோக செயற்பாடுகளை முன்னெடுக்காமையினாலேயே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

நேற்று முன்தினத்திலிருந்து எரிபொருள் பவுசர்கள் கடமைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளன. கொலன்னாவையில் இறக்கும் எரிபொருளை விநியோகிக்க எரிபொருள் பவுசர்கள் இல்லாததாலேயே முத்துராஜவெலவில் தரையிறக்க நேர்ந்தது. அத்தோடு, முத்துராஜவெலயில் தரையிறக்கப்பட்ட எரிபொருளை குழாய்களினூடாக விநியோகிக்க முடியாது. பவுசர்களினூடாகவே விநியோகிக்க வேண்டும். இதன் காரணமாகவே நாட்டின் அநேகமான பிரதேசங்களுக்கு எரிபொருளை விநியோகிக்க முடியாமல் போனது.

இந்நிலையில், மீண்டும் எரிபொருளை கொலன்னாவையில் தரையிறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேற்றிலிருந்து விநியோக நடவடிக்கைகள் சீராக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் இல்லாது எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருக்கலாம். அநேகமான இடங்களில் வாகனங்களை விட பீப்பாய்களே அதிகம் காணப்படுகின்றன என்றார்.

## இறக்குமதிப் பொருட்களுக்கு...

அடுத்த 06 மாதங்களுக்கு அமுலில் இருக்கும் என நிதியமைச்சு அறிவித்துள்ளதுடன் விசேட பண்ட வரிச்சட்டத்தின் கீழ் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ இந்த வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளார்.

வரி அதிகரிப்பினால் இறக்குமதி செய்யப்படும் தயிர், அப்பிள், திராட்சை, சீஸ் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படும் வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் ஆப்பிள் மீதான வரி 100 - 300 ரூபாவினாலும், ஒரு கிலோகிராம் திராட்சை மீதான வரி 200 - 300 ரூபாவினாலும் பேரீச்சம்பழம் ஒரு கிலோவுக்கான வரி 100 - 200 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் தோடம்பழத்திற் கான வரி 125 - 200 ரூபாவினால் அதிகரிக்கப்பட் டுள்ளதுடன் மாதுளை கிலோகிராம் ஒன்றிற் கான விசேட பண்டவரி 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோ யோகட், வெண்ணெய் உள்ளிட்டவற்றுக்கான வரி 800 - 1000 ரூபாவி னாலும், பாலாடைக்கட்டிக்கான (சீஸ்) விசேட பண்ட வரி ஒரு கிலோவுக்கு 400 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவப்பு வெங்காயம் ஒரு கிலோவுக்கான வரி 50 ரூபாவாலும் வெள்ளைப்பூடு ஒரு கிலோவுக்கான வரி 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. உலரவைக்கப்பட்ட மிளகாய் ஒரு கிலோவுக்கான வரி 100 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. வேர்க்கடலை ஒரு கிலோவுக்கான வரி 220 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆடைகளின் விலைகள் 50 வீதத்தால் அதிகரிக்கப்படலாம் என புடவை கைத்தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை யால் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினால் தற்போது சந்தையில் புடவைகளின் விலைகள் 35 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் ஆடை உற்பத்தித்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தைத்து முடிக்கப்பட்ட ஆடைகளின் விலைகள் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

## தேசிய வைத்தியசாலையில்...

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். இதன் காரணமாக நோயாளர்களுக்கு மூன்று வேளைகளும் உணவு வழங்கும்பொருட்டு விறகு அடுப்புகளில் சமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நோயாளர்கள் பாதிக்கப்படாத வண்ணம் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

எனினும் மூன்று வேளைகளும் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்களுக்கு விறகு அடுப்பில் சமைப்பது பெரும் சிரமம் என ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் வைத்தியசாலை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இலங்கை கடற்படையினருக்கு...

காலை 10 மணிக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் சென்னை ஆட்சியர் மாவட்ட அலுவலகத்திலும் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் படுகொலை, தாக்குதல் நடத்துவது, கைது செய்வதை தடுக்க வேண்டும் என்பதுடன், படகுகளை கைப்பற்றுவது, அதனை சேதப்படுத்து வது மற்றும் ஏலம் விடுவது போன்றவற்றை உடனடியாக நிறுத்துவதற்கு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக, இலங்கை அரசின் அத்துமீறல் செயல்களை உடனடியாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது, 13 கோரிக்கைகளை முன்வைத்து போராடவுள்ளதுடன், அதில் இலங்கை கடற் படையால் தமிழக மீனவர்கள் கொலை செய்வதை தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் சர்வதேச விதிகளை மீறி இந்திய மீனவர்களை தாக்கி படுகொலை செய்யும் இலங்கை அரசு மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்யுமாறும் கோரிக்கைவிடுக்கப்படுகின்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் நாடு மீனவர் தொழிலாளர் சங்கங்களின் ஒருங் கிணைப்புக்குழுவும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அனைத்து மீனவர் சங்க ஒருங்கிணைப்புக்குழுவும் முன்னெடுக் கின்றன.

இதனால் தீர்வில்லையேல் மார்ச் 28 மற்றும் 29 ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட் டத்தையும் முன்னெடுப்பதற்கு அரசை வலியுறுத்த வுள்ளதாகவும் தெரிவித்தன.

# இந்தியாவிடமிருந்து 7,580 கோடி ரூபா மதிப்பிலான பொருட்கொள்வனவுக்கு நிதியுதவி

## இந்தியா – இலங்கை நேற்று ஒப்பந்தம்

திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது



இந்தியாவிடமிருந்து 7 ஆயிரத்து 580 கோடி ரூபா மதிப்பிலான கோதுமை மா, சர்க்கரை, அரிசி மற்றும் மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தை இலங்கை மேற்கொண்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த இலங்கை நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, மீனவர்கள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாக இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. அப்போது இலங்கையில் இம்மாதம் நடைபெறவுள்ள 5ஆவது பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

கொரோனா பரவல் அதிகம் இருந்த நேரத்தில் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் இலங்கைக்கு, பெற்றோலியப் பொருட்கள் கொள்முதலுக்காக இந்திய அரசு 3,750 கோடி ரூபா கடனுதவி அளித்தது. இந்நிலையில், பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ புதுடில்லியில் நேற்று முன்தினம் சந்தித்தார். அப்போது பொருளாதார வீழ்ச்சியின்போது தங்களுக்கு உறுதுணையாக இருந்ததற்கு அவர் நன்றி கூறினார்.

இந்தச் சந்திப்பு குறித்த இலங்கை தூதரகத்தின் அறிக்கையில், ''இந்தியா எப்போதும் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கிறதென இந்தியப் பிரதமர் மோடி கூறியுள்ளார்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுலா, மீனவர் பிரச்சினை என இரு தரப்பு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, மீனவர்களை மனிதாபிமானத்துடன் அணுகுவது, கைதாகும் மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிப்பது உள்ளிட்டவற்றை விவாதித்ததாகவும் இலங்கை தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விக்ரம் மிஸ்ரி ஆகியோரையும் பெசில் ராஜபக்ஷ சந்தித்தார். அப்போது இந்தியாவிடமிருந்து கோதுமை மா, சர்க்கரை, அரிசி மற்றும் மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிலையில், கடும் பொருளாதாரச் சிக்கலில் இருக்கும் இலங்கை, இந்திய அரசிடம் உதவி கேட்ட நிலையில் அத்தியாவசியப் பொருட்களை வாங்க ரூ. 7,580 கோடி கடனுதவி வழங்க இந்தியா முன்வந்ததுடன், இது தொடர்பாக இரு நாட்டிற்கும் இடையே ஒப்பந்தமும் கையெழுத்தானது.

முன்னதாக, கடந்த மாதம் இந்தியா இலங்கைக்கு ரூ. 3,750 கோடியை கடனுதவி செய்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் வீடொன்றிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு





(கல்குடா, மீராவோடை நிருபர்கள்)

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மரணமடைந்த நிலையில், அவரது வீட்டில் இருந்து நேற்று (17) மாலை மீட்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

பிறைந்துறைச்சேனை முஹம்மதியா வீதியில் வசித்து வந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரும் மூன்று பிள்ளைகளின் தந்தையுமான முஹம்மது முஸ்தபா செய்யது ஹமீட் (வயது – 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது அறையில் நேற்று முன்தினம் இரவு உறங்கியவர் மீண்டும் எழும்பாத நிலையில் அவரது பிள்ளைகள் மதியம் எழுப்பியபோது எந்தவித சத்தமும் வரவில்லை. பின்னர் கதவை உடைத்தபோது அவர் உயிரிழந்த நிலையில் இருந்ததாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார், அவசர சேவை பிரிவின் வாகன உதவியுடன் சடலத்தை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதுடன், இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## டொலர்களை...

இத்தாலியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வமைப் பானது, இலங்கையர்கள் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலை குறித்து தமது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இது குறித்து அவ்வமைப்பு தெரிவித்துள்ள தாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியோ அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் பணப்பரிமாற்றம் வீழ்ச்சியடைவதாலோ ஏற்பட வில்லை என்பதே நாம் அறிந்த உண்மை. எமது உறவினர்கள், நண்பர்கள் நீண்ட வரிசைகளில் நின்று தவிப்பதற்கு தற்போதைய ஆட்சியாளர்களே காரணம். இப்போது நமது நாட்டை ஆளும் ஊழல் அரசியல்வாதிகளும் கடந்த காலத்தில் ஆட்சிசெய்தோரும் எமது இரத்தத்தையும் வியர்வையையும் கொள்ளையடித்துள்ளனர்.

ஊழலற்ற அரசாங்கம் அமையும் வரை வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களாகிய நாங்கள் நாட்டுக்கு டொலர்களை அனுப்புவதில்லை யென தீர்மானித்துள்ளோம்.

நாட்டில் பொருளாதார நெருக்கடியை தீர்க்க காத்திரமான நடவடிக்கைகளை எடுக்காததும் பிரச்சினைகளை தீர்க்காததும் அரசாங்கத்தின் இயலாமையாகும் எனத் தெரிவித்துள்ளது.

## நெருக்கடியை முன்பே...

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி அவர்களே!

நாட்டு மக்களுக்கு நீங்கள் ஆற்றிய உரையை நான் கேட்டேன். அதில் எனக்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டதால் நான் இதை எழுதுகிறேன்.

இந்த நெருக்கடியை நீங்கள் முன்பே அடையா ளம் கண்டதாக கூறினீர்கள். எனவே வாகன இறக்குமதியை நிறுத்தி அந்நிய செலாவணியை சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட் டீர்கள்.

ஆனால், இப்படி ஒரு நெருக்கடியை நீங்கள் முன்பே அடையாளம் கண்டிருந்தால் அரசியல் பிரபலத்தை பெறுவதற்காக வரிகளை குறைத்து சுமார் 600 பில்லியன் ரூபா அரச வரி வருவாயை ஏன் இழந்தீர்கள்? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஹர்ஷ எம்.பி. எழுப்பிய மேலும் சில கேள்விகள் வருமாறு,

உலகிலேயே மிகக் குறைந்த அரச வருமானம் கொண்ட நாடான இலங்கையில் அரச வருமானம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தமையே நெருக்கடியின் ஆரம்பம் எனவும் ரூபா மதிப்பு வீழ்ச்சியால் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்ப தாகவும் அதன் மூலம் வர்த்தக பற்றாக்குறையை குறைக்கலாம் என்றும் கூறியிருந்தீர்கள்.

நீங்கள் கூறுவதனை போன்று நெருக்கடியை முன்கூட்டியே அறிந்திருந்தால் ரூபாவை செயற்கையாக கட்டுப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கியது ஏன்?

இதன் விளைவாக நாடு சுமார் 4 பில்லியன் டொலர் வருவாயை இழந்தது உங்களுக்குத் தெரியுமா?

இதனை ரூபாவை பாதுகாப்பதற்காக சுமார் 1.5 பில்லியன் டொலர்கள் எரிக்கப்பட்டுவிட்டது என கூறலாம்.

மேலும் ரூபாவின் செயற்கையான கட்டுப்பாட்டின் காரணமாக நாடு சுமார் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவ ணிகளை இழந்துள்ளது.

அப்படித்தான் அந்நியச் செலாவணி நெருக்கடி நீடித்தது ஜனாதிபதி அவர்களே.

இந்த நேரத்தில் நாட்டிற்காக மக்கள் மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத் துமாறு கேட்டுக்கொண்டீர்கள். மக்கள் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவதற்குக் கூட எரிபொருளை கண்டுபிடிக்க முடியவில்லை. மறுபுறம் இவ்வாறு நெருப்பு விலையில் எரிபொருளை பெற்று மக்களே அதனை வீணடிப்பதாக நினைப்பது தவறு.

மேலும் எரிபொருளும் மின்சாரமும் ஒரு பொருளாதாரத்தின் உந்து சக்திகளாகும்.

வாடகை வாகனம் ஓட்டும் நபர் எப்படி எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்த முடியும்?

ஹயர்களை குறைத்து தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்றால் அவர்களுக் குத் தேவையான ஆதரவை நீங்கள் வழங்க வேண்டும்.

மேலும் முழுமையான நாடு என்ற ரீதியில் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்தினால் பொருளாதாரம் சரிந்துவிடும்.

எவ்வாறாயினும் இந்த சந்தர்ப்பத்தில் தேசத்திற்கு உரையாற்றியதற்காகவும் மக்களின் பலத்தை உயர்த்துவதற்கான உங்கள் முயற்சிகளுக்காகவும் நாட்டின் தலைவர் என்ற முறையில் நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

ஒரு தலைவராக இது ஒரு நல்ல விடயம். ஆனால் பொறுப்பற்ற பொருளாதார நிர்வாகத் தால் இந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டதற்கான சாத்தியக்கூறுகளை நீங்கள் நிராகரிக்க முடியாது.

கடன்களை மீளச் செலுத்துவதற்கான வழிமுறையை உருவாக்க சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகவும் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். அது நல்ல விடயம்தான்.

ஆனால் கேள்வி என்னவென்றால் நெருக்க டியை முன்கூட்டியே அறிந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்த ஏன் இவ்வளவு தாமதம்?

பொருளாதார நிபுணர்கள் 18 மாதங்களுக்கு முன்னரே நாடு இவ்வாறானதொரு நெருக்கடிக் குள் தள்ளப்படும் எனவும் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தனர்.

இன்று நீங்கள் எடுக்கப்போகும் தீர்மானத்தை அன்றே எடுத்திருந்தால் மக்கள் இப்படி ஒரு நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்காது ஜனாதிபதி அவர்களே என ஹர்ஷ எம்.பி. தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்

18.03.2022 வெள்ளி பங்குனி 4

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: உத்தரம்**
அ.கா. 12.34 - 19.03.2022
அதிகாலை 12.18 வரை
**யோகம்: கண்டம்**
அ.கா. 1.09 - இரவு 11.15
**விருத்தி**
இரவு 11.15 - 19.03.2022
இரவு 9.01 வரை
**திதி: பௌர்ணமி**
பிற்பகல் 12.47 வரை
**அமர பட்ச பிரதமை**
பி.ப. 12.47 - 19.03.2022
காலை 11.37 வரை
**முற்கரணம்: பவம்**
அ.கா. 1.12 - பி.ப 12.47
**பிற்கரணம்: பாலவம்**
பி.ப. 12.47 - 19.03.2022
அதிகாலை 12.15 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.16 - 7.40
மாலை 5.21 - 6.22
**அசுப நேரங்கள்**
ராகு காலம்
காலை 10.48 -
பி.ப. 12.19
**குளிகை காலம்**
காலை 7.47 - 9.17
**எமகண்ட காலம்**
மாலை 3.20 - 4.51
**துர் முகூர்த்தம்**
காலை 8.41 - 9.29
பிற்பகல் 12.43 - 1.31

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வேலைத்தளத்தில் பணிகள் அர்ப்பணிப்புடன் நிறைவேறலாம். பரம்பரை சொத்து விடயங்களில் நல்ல நிலை உருவாகலாம். தொழிலில் அதிருப்தி உண்டாகலாம். உங்கள் மீதான எதிர்ப்பு விடயங்களால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். இறைதியானம் நன்மை.

**ரிஷபம்:** மாணவர்களுக்கு சாதகமான நாளாக அமையலாம். நுண்கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஆர்வம் அதிகரிக்கலாம். எதிர்பாரா செலவுகளால் மனக்கவலை தோன்றலாம். சில ஆண்களுக்கு பெண்களின் ஆதரவால் நல்ல நிலை பெறலாம். தடைப்பட்ட செயல்கள் நிறைவேறலாம்.

**மிதுனம்:** வாழ்க்கைதுணையின் உணர்வுகளை மதித்து நடப்பது நன்மை. புதிய முதலீடுகளுக்கு இன்றைய நாள் சாதகமாக இல்லை. சமுதாயத்தில் மதிப்பு மேம்படலாம். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றலாம்.

**கடகம்:** வணிகத்தில் விற்பனை அதிகரிக்கலாம். நண்பர்களுடன் மகிழ்வான நாளாக அமையலாம். தத்துவம் சம்பந்தப்பட்ட கற்கைகளும் ஏற்படலாம். உங்கள் மீதான எதிர்ப்புகளிலும் உங்கள் ஆதிக்கமே அதிகரிக்கலாம். உங்கள் உதவி சிலருக்கு கிடைக்கலாம்.

**சிம்மம்:** பிறருடன் உரையாடும்போது பிரச்சினைகளிலிருந்து தவிர்க்கும், தேவையற்ற சொற்களை நீக்குவதில் கவனம் தேவைப்படலாம். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கலாம். எதிர்மறை செய்திகள் கிடைக்கலாம். சில விடயங்களை அனைவரிடமும் பகிராமல் இருப்பது நன்மை. இறைவணக்கம் தேவை.

**கன்னி:** வணிகத்தில் சில அனுபவங்களை பயன்படுத்தி இலாபங்கள் கிடைக்க பெறலாம். கடனாக கொடுத்த பணத்தின் வரவு உண்டாகலாம். வாழ்க்கைத்துணையால் பெருமை அடையலாம். வாகனம் செலுத்துவதில் சிறிய கவனம் தேவைப்படலாம். பணியிடங்களில் வேலைகள் சிறப்பாக நிறைவேறலாம்.

**துலாம்:** வீட்டுச் செலவுகள் அதிகரிக்கலாம். அயலில் உள்ளவர்களுடன் உறவை சிறந்த முறையில் வைத்திருப்பது நல்லது. காதலில் புரிந்துணர்வு தேவைப்படலாம். உங்களைப் பற்றி சில வதந்தி ஏற்படலாம். பிள்ளைகளுடன் அன்பாக இருந்து இன்றைய நாளை இனிமை நிறைந்ததாக மாற்றிக்கொள்ளலாம்.

**விருச்சிகம்:** தொழிலில் கடந்த கால உழைப்புக்கான பலன்கள் கிடைக்கலாம். இல்லத்தில் மகிழ்வான சூழ்நிலை உண்டாகலாம். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். சில தனிப்பட்ட வழிகாட்டுதலில் குடும்ப உறவுகள் வலுப்படலாம். காதல் முன்மொழிதல் ஏற்படலாம்.

**தனுசு:** வீடு/காணி/சொத்து வாங்கும் திட்டம் உருவாகலாம். உங்கள் ஆற்றல் அதிகரிக்கலாம். அரசாங்க பணிகளில் இருப்பவர்களுக்கு சாதகமான நிலை தோன்றலாம். நிதி விடயங்களில் அதிர்ஷ்டம் உண்டாகலாம். நண்பர்களுடன் இன்று மகிழ்வான நாளாக அமையலாம்.

**மகரம்:** வாழ்க்கைத்துணையுடன் மன உணர்வுகளை பகிர்தலால் நிம்மதி கிடைக்கலாம். இன்று சிறப்புமிக்க ஒருவரின் நட்பு கிடைக்க பெறலாம் . புதிய வேலைக்கு செல்லும் விருப்பம் ஏற்படலாம். சில விடயங்களில் சகிப்புத்தன்மை தேவைப்படலாம். ஆன்மீக செயல்களில் ஈடுபாடு உருவாகலாம்.

**கும்பம்:** வேலைத்தளத்தில் பணிகளில் சில இடையூறுகள் ஏற்படலாம். பிள்ளைகள் உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு இல்லாமல் இருந்தால் மனக்கவலை தோன்றலாம். நிதி நிலைமை அதிருப்தி தரலாம். சில தடைகள் காரணமாக மனக்கவலை ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.
சந்திராஷ்டமம்: அவிட்டம் நட்சத்திரம் பாதம் 3/4க்கு காலை 6.33 - மாலை 6.24 சதயம் நட்சத்திரத்திற்கு மாலை 6.25 - 19.03.2022. மாலை 5.50 வரை. பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு 19.03.2022 மாலை 5.50 - 20.03.2022 காலை 11.11

**மீனம்:** தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்யும் நல்ல நிலை உருவாகலாம். வேலைகளில் உங்கள் ஆக்கப்பூர்வமான செயல்கள் பாராட்டப்படலாம். வணிகத்தில் சிறந்த வளர்ச்சி உருவாகலாம். எதிர்காலத்திற்கு பயன் தரும் சில தீர்மானங்கள் உண்டாகலாம். இறையருளால் இன்று நல்ல நாளாக அமையலாம்.
சந்திராஷ்டமம்: பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 4க்கு 20.03.2022காலை 11.11 - மாலை 4.56 வரை. உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு 20.03.2022 மாலை 4.56- 21.03.2022 மாலை 3.49.

# நாட்டிலுள்ள நெருக்கடி நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு எவ்வித தெளிவும் இல்லை!

## தேசத்தை மேலும் சீரழிக்காமல் மக்களின் விருப்பத்துக்கு வாய்ப்பளிக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை

நாட்டில் நிலவும் நெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எவ்வித தெளிவும் இல்லையென்பது, அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



நாட்டு மக்களுக்கான ஜனாதிபதியின் உரை குறித்து தனது நிலைப்பாட்டை குறிப்பிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாட்டை மேலும் சீரழிக்காமல் தான் விரும்பிய குழுவினரிடம் நாட்டை ஒப்படைப்பதற்கு மக்களுக்கு வாய்ப்பை பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகிறோம்.

ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் நாட்டிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் எதுவும் பேசவில்லை. அதேபோன்று நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் எந்த விடயத்தையும் குறிப்பிடவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி உள்ளிட்ட அரசங்கம் முழுமையாக தோல்வியை சந்தித்துள்ளது என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துவது மாத்திரமே ஜனாதிபதியின் கருத்துகளில் வெளிப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இங்கிரியவிலுள்ள வர்த்தக நிலையத்தில் தீப்பரவல்







இங்கிரிய - ஹொரணை பிரதான வீதியிலுள்ள மீன் விற்பனை நிலையமொன்றில் நேற்று (17) திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இங்கிரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜனக்க உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து வர்த்தக நிலையத்தின் கதவை உடைத்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஹொரணை நகர சபையின் இரு தீயணைப்பு வாகனங்கள் தீக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

# வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய தந்தை - மகன் கைது

*(யாழ் நிருபர்)*

யாழில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தந்தையும் மகனும் மானிப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை பொலிஸார் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட இளைஞனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வீட்டிலிருந்து வாள் மீட்கப்பட்ட சம்பவத்தினை அடுத்து, வீட்டின் உரிமையாளர் எனும் அடிப்படையில் இளைஞனின் தந்தையாரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



நேற்றும் நாடளாவிய ரீதியில் மக்கள் எரிபொருளுக்காக நீண்டநேரம் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது. குறிப்பாக, தலைநகர் கொழும்பில் சகல அரச எரிபொருள் நிரப்பு நிலையங்களும் வாகனங்களால் நிரம்பிக் காணப்பட்டன.

(படங்கள்-ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# இடமாற்ற கடிதங்கள் முழுமையாக சென்றடையவில்லை

## இலங்கை அரச ஆசிரியர்கள் சங்கம் சுட்டிக்காட்டு



*(மண்முனை நிருபர்)*

கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்களுக்கான கடிதம் இதுவரை உரிய ஆசிரியர்களுக்கு சென்றடையவில்லை. இது கிழக்கு மாகாணத்தில் பாரிய குறைபாடாக காணப்படுகின்றது - என இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஷெகான் திசாநாயக்க, மட்டக்களப்பில் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஊடவியலாளர் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார்

இவ்வூடக சந்திப்பில் இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஷெகான் திசாநாயக்க, சங்கத்தின் மேலதிக செயலாளர் நாலக டி சில்வா மற்றும் சங்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராசா, ருபேஷன், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ந.காஞ்சீவன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் பல வாரங்களாக நடைபெறாமல் இருக்கின்றன. எட்டு வருடங்கள், பத்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றுகின்ற - அதாவது, கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் அவர்களுடைய சொந்த பிரதேசங்களுக்கு செல்ல முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது

அத்துடன், மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்களுக்கான கடிதம் ஆசிரியர்களுக்கு இதுவரை சென்றடையவில்லை இது கிழக்கு மாகாணத்தில் பாரிய குறைபாடாக காணப்படுகின்றது.

இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படும்அதற்கான கடிதங்கள் உரியவர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை

இதுதொடர்பாக உரியவர்கள் விரைவாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் நாங்கள் தொழிற்சங்க ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக உள்ளோம்.

அடுத்ததாக கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இங்கு தொழிலை எதிர்பார்த்துக்கொண்டு பட்டதாரிகள் இருக்கின்றார்கள் அந்தப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கி ஆசிரியர்களாக இணைப்பு செய்யப்படும் சந்தர்ப்பங்கள் இருக்கும்போது தற்பொழுது, உயர்தரம் கல்வி பயின்றவர்களை ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ளப்படும் செயற்பாடு இடம்பெற்று வருவதாக அறியமுடிகின்றது. மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் இந்த நடவடிக்கையை எடுப்பதாக நாங்கள் கருதுகின்றோம்

தொழிலை எதிர்பார்த்துக்கொண்டு பட்டதாரிகள் இருக்கும்போது உயர்தரம் கல்வி கற்றவர்கள் எடுக்க வேண்டிய அவசியமில்லை. முதலில் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குங்கள். ஒன்றரை வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக - பயிலுனராக இருக்கின்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை முன்னுரிமைப்படுத்தி நியமனம் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை நாங்கள் அரசாங்கத்திடம் முன்வைக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அவர்களின் நியமனக் கடிதத்தில் பொது பாடம் என குறிப்பிட்டு பத்து வருடங்களுக்கு முன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறானவர்கள் 6 தொடக்கம் உயர் தரம் வரை மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறான ஆசிரியர்களுக்கு தற்போது முதலாம் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரை கற்பிக்குமாறு சிலர் அதிகாரத்தைப் பயன்படுத்தி பணித்திருக்கின்றார்கள். இவ்வாறான செயற்பாடு இடம்பெறும்போது மாணவர்கள் அதாவது ஒரு சிறிய மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, குறித்த ஆசிரியர்களுக்கு அவர்களை இதுவரை அதாவது, பத்து பதினைந்து வருடங்களாக கற்பித்த பாடங்களை வழங்கி மாணவர்களின் நலன் பாதிக்கப்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தை கவனத்திற்கொண்டு உடனடியாக உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கூறுகின்றோம். தற்போது நாட்டில் பெற்றோல் விலை, டீசல் விலை மிகவும் அதிகரித்திருக்கிறது. வரிசை வரிசையாக நின்று பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணத்தால் ஆசிரியர்கள் கடமைக்கு செல்லும் போது மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். உரிய நேரத்துக்கு செல்ல முடியாத சூழ்நிலை, வாழ்க்கைச் செலவு அதிகம் இவ்வாறு பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றார்கள் என தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அல்-ஷெய்க் ஜூமாஹ் ஹம்தான் அல்-ஷீஹியை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி குறித்து கலந்துரையாடினார். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இதன்போது பாக்கிர் மாக்கார் வலியுறுத்தினார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 18ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# இன்னுமொரு இழுபறி!

பொருளாதார நெருக்கடியால் குறிப்பாக எரிபொருள் தட்டுப்பாடு, விலையுயர்வு, மின்வெட்டு போன்றவற்றால் மக்கள் பெரும் நெருக்குவாரங்களை எதிர்கொண்டிருக்கையில், அற்ப விடயங்களை ஒட்டி, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் அரசின் முக்கிய பிரமுகர்களினால் மாறி மாறி வெளியிடப்பட்ட ஒன்றுக்கொன்று முரணான அறிவிப்புகள் மற்றும் அறிக்கைகளே பல குழப்பங்களுக்கும் அடிப்படை என்று அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும விசனம் தெரிவித்திருக்கின்றார்.

உண்மைதான். என்ன பேசுகின்றோம், எது பேசுகின்றோம் என்று தெரியாமல் அமைச்சர்கள் பலர் உளறிக் கொட்டியமை கூட பல குழப்பங்களும் காரணம்தான். பெரும் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கும் நாட்டின் நிதி, பொருளாதார, நிர்வாகப் பிரச்சினையிலும் கூட இதுதான் நிலைமை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிதி நிர்வாகம் மற்றும் பொருளாதார மேலாண்மையில் இலங்கை மத்திய வங்கியும், நிதி அமைச்சும் முக்கிய அங்கம் வகிக் கின்றன. இந்த விடயத்தில் இந்த இரண்டு தரப்புகளுமே ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்று, கொள்கைக் கோட்பாடுகள் பேசி, குழப்பியடித்தமை வெளிப்படையானது.

இதன் விளைவைப் புரிந்து கொண்டுள்ள ஆட்சித் தலைமை, மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ராலை அதிரடியாக மாற்றக் கூடும் என்றும், திறைசேரியின் அங்கத்தவர்களில் கூட மாற்றம் வரலாம் என்றும் பொருளாதார, அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

நிதி, பொருளாதார கையாள்கை முறைமையில் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் நிலைப்பாட்டுக்கும், மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலின் கருத்தியலுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவது வெளிப்படையானது. பகிரங்கமானது.

நிதி நெருக்கடியிலிருக்கும் நாட்டை மீட்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுவதா என்ற அடிப்படைக் கொள்கைக் கோட்பாட்டு விடயத்திலேயே நிதி அமைச்சுக்கு மாறான கருத்தியலை மத்திய வங்கி ஆளுநர் வெளியிட்டு வருகின்றார். சர்வதேச நாணய நிதியத்திடம் சரண் புகுவதை அவர் எதிர்க்கின்றார். அதனால் சர்வதேச நாணய நிதியத்துடனான தொடர்பாடல் விடயத்தைக் கையாளும் பொறுப்பை இலங்கை மத்திய வங்கியை ஓரங்கட்டி, வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் மூலம் முன்னெடுக்கின்றது இலங்கை நிதி அமைச்சு.

ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதியை செயற்கையாகப் பிடித்து வைத்திருக்கும் நிலைப்பாட்டை எடுத்து, அதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால். தம்முடைய அந்தக் கொள்கையை அவர் பகிரங்கமாக வெளியிட்ட அடுத்த நாள் டொலரின் பெறுமதி மீதான அந்த செயற்கைக் கட்டுப்பாட்டை நீக்கி, அதனை மிதக்க விடும் முடிவை அரசு அதிரடியாக எடுத்து அறிவித்தபோது, மத்திய வங்கி ஆளுநரின் நிலைமை பெரும் சங்கடமாகப் போயிற்று.

மத்திய வங்கி ஆளுநர் பதவி என்பது ஆறாண்டுகள் காலத்தைக் கொண்டது.

இப்போதைய பதவி 2016இல் பதவியேற்ற கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியுடன் ஆரம்பமானது. அவர் 2016 ஜூலையில் பதவியேற்றார். 2019 டிசம்பர் 24இல் ஓய்வுபெற்றார். அவரது இடத்துக்கு நியமனம் பெற்ற பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷமன் செப்டெம்பர் 2021இல் பதவி விலக அந்த இடத்துக்கு நிவாட் கப்ரால் நியமனமானார்.

ஆளுநர் பதவிக்கான ஆறாண்டுகள் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் மாதத்துடன் முடிகின்றது. அதன் பின்னரும் அப்பதவியில் தொடர கப்ராலுக்கு புதிய நியமனத்தை ஜனாதிபதி வழங்குவாரா? அல்லது அதற்கு முன்னரே அவரைப் பதவியிலிருந்து தூக்குவாரா?

இதற்கிடையில் ஜனாதிபதியின் உத்தரவு மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையைத் தொடர்ந்து மத்திய வங்கி ஆளுநர் தனது பதவியை இராஜினாமா செய்வார் என ஊகங்கள் வெளியாகியுள்ளதாக நாளிதழொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஜனாதிபதி மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னரே இந்த உத்தரவு வெளியாகியுள்ளது எனவும் செய்தி வெளியாகியிருந்தது.

ஆனால், மத்திய வங்கி ஆளுநரை பதவிவிலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுக்கொண்டுள்ளார் என வெளியான செய்தியில் எந்தவித உண்மையுமில்லை என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மத்திய வங்கி ஆளுநரை பதவிவிலக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி வதந்தி என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் அதிகாரிகள் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதில்லை. நாணய விடயங்கள் குறித்து மாத்திரமே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும். ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் மத்திய வங்கி ஆளுநர் மீது முழுமையான நம்பிக்கையுள்ளது. அவரை பதவி விலகுமாறு கேட்பதற்கான காரணம் எதுவுமில்லை எனவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இப்படியான நிலைமையை நோக்குகையில் அரச பொருளாதாரத்தை கையாளும் விடயத்தில் இழுபறி நிலைமை தொடரவே போகின்றது. ஆளுநரை பதவி விலக்க அரசால் முடியாத நிலை. அவராகவே இராஜினாமா செய்தாக வேண்டும். இந்த இழுபறி நாட்டை மட்டுமல்ல, வீட்டையும் பாதிக்கப் போகிறது. அதுவே துயரம். இது நாட்டில் இன்னுமொரு இழுபறி.

# இருளுக்குள் சிக்கியிருக்கும் இலங்கை



உலக மக்களைப் போலவே இலங்கை மக்களும் கொரோனா பெருந்தொற்றால் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இன்னலுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெருந்தொற்றிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க இலங்கை அரசு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டது. பொதுமக்கள் அனைவரும் அவற்றுக்குத் தமது அதியுயர் பங்களிப்பை வழங்கினார்கள்.கொரோனாவைத் தொடர்ந்து இப்போது மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி இலங்கையில் உருவாகியிருக்கிறது. அரசாங்கத்தின் டொலர் கையிருப்பு வெகுவாகக் குறைந்துள்ளதுதான் இதற்குக் காரணமாகும்.

எந்தளவு குறைந்திருக்கிறது என்றால், இலங்கைக்கு அத்தியாவசியமான எரிபொருட்களைக் கொள்வனவு (கொள்முதல்) செய்யக்கூட அரசாங்கத்திடம் டொலர்கள் இல்லை. அதனால்தான், நாட்டில் ஒரு நாளைக்கு ஏழரை மணித்தியாலங்கள் என மின்சார விநியோகத்தைத் தடைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி, தற்போது அதை அரசு நடைமுறைப்படுத்திவருகிறது. இந்த மின்சார விநியோகத்தடை காரணமாக நாட்டுமக்கள் அனைவரும் தினந்தோறும் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்துத் தனியாக விவரிக்கத் தேவையில்லை. குறிப்பாகப் பரீட்சைகளுக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் மாணவர்கள் முகம்கொடுக்க நேரும் இவ்வாறான அசௌகரியங்கள் அவர்களது எதிர்காலத்தையே பாதிக்கும்.

அவ்வாறே இலங்கையில் தமது உற்பத்திகளுக்காக மின்சாரத்தை நம்பியிருக்கும் தொழிற்சாலைகள் இயங்குவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. போக்குவரத்து, கைத்தொழில்கள், விவசாயம் போன்ற தொழில்துறைகளில் உள்ள கருவிகளை இயக்கத் தேவையான எரிபொருள் இல்லை. ஆகவே, இவ்வாறான தொழில்துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் பலரும் தமது வேலைவாய்ப்புகளை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயுத் தட்டுப்பாட்டின் காரணமாக இலங்கையில் பல உணவகங்களை மூட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. உணவகங்களின் உரிமையாளர்களைப் போலவே, அவற்றில் பணிபுரியும் சேவகர்களது வருமானமும் இதனால் இல்லாமல் போயுள்ளது. சீமெந்து விலை அதிகரிப்பின் காரணமாகக் கட்டடக் கட்டுமான வேலைகள் பலவும் நின்றுபோயுள்ளதால், அந்தத் தொழில்களில் ஈடுபடுபவர்கள் பலரும் தற்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களுக்கு மாத்திரமல்லாமல், மருந்துகளுக்கான தட்டுப்பாடுகூட இலங்கையில் பாரியளவில் நிலவுகிறது. பஸ் மற்றும் வாடகை வாகனங்களின் கட்டணமும் அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசியும் இப்போதும் உச்சத்திலேயே உள்ளது. அரிசி, கோதுமைமா உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களினதும், ஏனைய பொருட்களினதும் விலைகளும் மக்களால் எளிதாக வாங்கக்கூடிய விலையில் இல்லை. நாட்டில் அரசாங்க விலைக் கட்டுப்பாடு இல்லை. இடைத்தரகர்களே பொருட்களின் விலையைத் தீர்மானிக்கிறார்கள். நெல் ஆலை உரிமையாளர்கள்தான் ஊடகக் கலந்துரையாடல் நடத்தி, அரிசி விலை குறித்து நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறார்கள் எனும்போது, நாட்டை ஆளும் கட்சி என்னதான் செய்கிறது என்ற கேள்வி எழுகிறது.

தற்போது இலங்கையில் நாட்டு மக்கள் அனைவரும் தேவையான பொருட்களை வாங்குவதற்காகப் பகல் முழுவதும் வரிசைகளிலும், இரவில் இருட்டிலும் காலம் கடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆண்களும், பெண்களும் பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு, பால் மா, பாண், அரிசி மற்றும் மருந்துகளுக்கான வரிசைகளில் காலை முதல் மாலை வரை பட்டினியோடும், எதிர்பார்ப்புகளோடும் காத்திருக்கிறார்கள். ஒரு பாணையோ, பால்மாவையோ பெற்றுக்கொள்ளக்கூடப் பல மணித்தியாலங்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய அவலநிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. என்னதான் வரிசைகளில் காத்திருந்தபோதிலும் அவற்றுக்கும் மிகுந்த தட்டுப்பாடு நிலவுகிறது.

அரசாங்கம் விரைவில் மக்களுக்காக ஏதாவது செய்யும் என்ற நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் காத்திருந்த பொதுமக்களை மேலும் நெருக்கடியில் தள்ளும்விதமாக அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுத்தது. பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்த நிதி அமைச்சகமும், இலங்கை மத்திய வங்கியும் இணைந்து, அத்தியாவசியமற்ற 367 பொருட்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்தன. அந்தப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதைக் கட்டுப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தலை நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ வெளியிட்டார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டாளரின் உரிய அனுமதியின்றி எந்தவொரு நபராலும், எந்தவொரு நாட்டிலிருந்தும் இலங்கைக்குள் இறக்குமதி செய்யத் தடைவிதிக்கப்படுவதாக அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கணினிகள், மூக்குக் கண்ணாடிகள், கைக்கடிகாரங்கள், இசைக் கருவிகள், விளையாட்டுச் சாதனங்கள், இறைச்சி, மீன், பால், சொக்லெட், மா (மாவு) சார்ந்த தயாரிப்புகள், பழங்கள், துரித உணவுகள், மதுபான வகைகள், சிகரெட் மற்றும் புகையிலைத் தயாரிப்புகள், வாசனைத் திரவியங்கள், ஒப்பனைச் சாதனங்கள், சுகாதாரப் பொருட்கள், இறப்பர் மற்றும் தோல் சார்ந்த தயாரிப்புகள், பயணப் பைகள், நில விரிப்புகள், ஆடைகள், செருப்புகள், செராமிக் மற்றும் கண்ணாடி சார்ந்த தயாரிப்புகள், இலத்திரனியல் சாதனங்கள் (மின்னணுச் சாதனங்கள்), வீட்டு மின் உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவை அவற்றுள் அடங்கும் சில பொருட்களாகும்.

இந்த இறக்குமதித் தடையோடு இலங்கையில் கைபேசிகளின் விலையும் முப்பது சதவீதம் அதிகரித்துள்ளது. அரசாங்கம் மேலுள்ள பொருட்களை அத்தியாவசியமற்ற பொருட்களாகக் கருதியபோதிலும், இந்த நவீன உலகில் இவற்றுள் கணினியும், கைபேசியும் அத்தியாவசியப் பொருட்களாக எப்போதோ மாறியாயிற்று. இலங்கையைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டாண்டு காலமாக, கொரோனா உக்கிரமாகத் தாண்டவமாடிக்கொண்டிருந்த காலப் பகுதியில், கணினி மற்றும் கைபேசி வழியாகத்தான் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இப்போதும் பெரும்பாலான வகுப்புகள் நிகழ்நிலை (virtual) மூலமாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வாறான ஒரு இக்கட்டான சந்தர்ப்பத்தில், மக்களின் அத்தியாவசியமான பொருட்களாக மாறியிருக்கும் மேற்குறிப்பிட்ட பொருட்களுக்கு இறக்குமதித் தடைவிதிக்கும்போது, நாட்டில் ஏற்கெனவே உள்ள இந்தப் பொருட்களின் விலை பெருமளவு உயர்கிறது. இது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளையும் வெகுவாகப் பாதிக்கும்.

இந்த நிலையையும், தட்டுப்பாடுகளையும் சீரமைக்க இலங்கை அரசாங்கத்திடம் எந்தவொரு செயற்றிட்டமும் இருப்பதை இதுவரை காண முடியவில்லை. மக்களை இந்த அளவு கஷ்டத்துக்குள் தள்ளினால் எப்படி வாழ்வது என்பதுதான் பொதுமக்கள் எழுப்பும் கேள்வி. மக்கள் மீது சுமத்தியிருக்கும் இந்த நெருக்கடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் மிகவும் வெளிப்படையாக மக்களுக்கு அறியத் தர வேண்டும் என்றபோதிலும், அவ்வாறான ஒன்று இதுவரை நடக்கவேயில்லை.

ஆசியாவில், பல இயற்கை வளங்களைக் கொண்ட இலங்கை எனும் அழகிய நாடு, தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி, மிகவும் துயரமான காலகட்டத்தைக் கடந்துகொண்டிருக்கிறது. யார் தம்மை இந்த இக்கட்டிலிருந்து மீட்கப்போகிறார்கள் என்ற கேள்வியோடு, இலங்கை மக்கள் தினந்தோறும் காத்திருக்கிறார்கள் வரிசைகளிலும், இருளிலும்.

**- எம்.ரிஷான் ஷெரீப்,**
**ஊடகர்**

**நன்றி - தமிழ் இந்து**

## தவக்கால சிந்தனை



### இதயமற்ற செல்வர்!

செல்வரும், லாசரும். இந்த உவமையில் இறந்ததும் எரிநரகத்திற்குச் செல்லும் செல்வரின் வாழ்க்கை நிலையைப் பற்றி ஒரே வரியில் சுருங்கக் கூறிவிடுகிறார் ஆண்டவர் இயேசு.

“அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து, நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்”. ஆம், அந்த செல்வர் செய்த ஒரே தவறு, தனது வீட்டு வாசலில் துன்புற்றுக்கொண்டிருந்த லாசரைப் பற்றிக் கவலைப்படாமல், தான் மட்டும் நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்ததுதான். உலக இன்பங்களைப் பற்றிய ஆண்டவரின் போதனை தெளிவாக இருக்கிறது. உணவு, கேளிக்கை, பொழுதுபோக்கு போன்ற உலக இன்பங்கள் அனைத்தும் நல்லவையே. ஏனென்றால், இறைவனால் படைக்கப்பட்டவை. ஆனால், அந்த இன்பங்களைத் தன்னலத்தோடு அனுபவிப்பது தவறு. அதிலேயே வாழ்வைக் கழிப்பதும் தவறு. உணவுக்காகவே வயிறு. வயிற்றுக்காகவே உணவு என்றிருந்தால், இரண்டையும் ஆண்டவர் அழித்துவிடுவார் என்றார் பவுலடியார். உண்மைதான், இந்த செல்வர் நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்ததால், ஆண்டவர் அவரை எரிநரகத்திற்குள்ளாக்கினார்.

## இன்றைய நாளில்...

- 633 – கலிபா அபூபக்கரின் தலைமையில் அராபியத் தீபகற்பம் ஒன்றுபட்டது.
- 1068 – லெவண்டம், அராபியத் தீபகற்பம் ஆகியவற்றில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 20,000 பேர் வரை இறந்தனர்.
- 1229 – 6ஆவது சிலுவைப் போர்: புனித உரோமப் பேரரசர் இரண்டாம் பிரெட்ரிக் தன்னை எருசலேமின் மன்னராக அறிவித்தார்.
- 1922 – ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தி ஆறாண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். இரண்டு ஆண்டுகளில் விடுதலையானார்.
- 1962 – 1954 இல் ஆரம்பமான அல்ஜீரிய விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1965 – சோவியத் விண்ணோடி அலெக்சி லியோனொவ் வஸ்கோத்-2 விண்கலத்தின் வெளியே 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் நடந்த முதல் மனிதர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.
- 1989 – எகிப்தில் 4,400 ஆண்டுகள் பழைமையான பதனிடப்பட்ட உடல் பிரமிட் ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1994 – பொஸ்னியாவின் பொஸ்னியர்களும், குரொவாசியர்களும் போரை முடிவுக்குக் கொண்டு வர அமைதி உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டனர்.

## நக்கல் நமசிவாயம்

ஆட்சிக்கு வந்தா சிங்கப்பூரா மாத்துவம் எண்டாங்கள்..! இப்ப ஸ்ரீலங்காவா மாத்த ஃபுள் ட்ரை பண்ணிக் கொண்டிருக்கிறாங்கள்..!



# கலாசார நிதியத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக பணம் செலவு செய்யப்பட்டுள்ளது



## இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குற்றச்சாட்டு

கலாசார நிதியத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக கடந்த அரசாங்கம், அந்த நிதியத்தின் பணத்தை பயன்படுத்தியதன் காரணமாக கலாசார நிதியத்தின் அடிப்படைப் பணிகளுக்கு நிதி இல்லை என தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

"ஒரே நாடு, ஒரே சட்டத்துக்கான" ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்கள் அண்மையில் தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய பாரம்பரியம் மற்றும் தொல்பொருட்களை பாதுகாப்பது தொடர்பான சட்டம், அனைத்து இன மக்களுக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் பல்வேறு மாகாணங்களில் உள்ள பொதுமக்கள் இச்செயலணிக்கு தகவல்களை வழங்கியுள்ளதாக இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளை பாராட்டிய இராஜாங்க அமைச்சர், தொல்பொருள் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும், அந்த இடங்களைப் பாதுகாப்பதற்கும் போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லை என்றும், இந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியத்தின் நிலையான சேமிப்புகளில் முதலீடு செய்த 25,000 மில்லியன் ரூபாவை கடந்த அரசாங்கத்தின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அடிப்படை நோக்கங்களுக்குப் புறம்பாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றமை தெரிய வந்துள்ளது.

"நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி என்பது சமமாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய உரிமையாகும். அந்த பொதுக் கல்வியில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்குத் தடையாக இருக்கின்ற தீவிரவாத போதனைகள் ஊக்குவிக்கப்படக்கூடாது". செயலணியின் உறுப்பினர்கள் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி. பெரேராவைச் சந்தித்தபோதே அவர் இக்கருத்துகளைத் தெரிவித்தார்.

இலங்கையில் "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற கருத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு, அக்கருத்தியலை ஆய்வு செய்ததன் பின்னர் நாட்டில் அதனை அமுல்படுத்துவதற்காக கருத்தியல் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வண.கலகொட அத்தே ஞானசார தேரரின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி, தற்போது நாட்டின் பல்வேறு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில், பொதுமக்களின் கருத்துகளையும் நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றது.

இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர்களுடனான இந்த சந்திப்புகளில் "ஒரே நாடு, ஒரே சட்டம்" ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர், உறுப்பினர்களான சட்டத்தரணி சஞ்சய மாரம்பே, எரந்த நவரத்ன, பானி வேவெல, அசீஸ் நிஷார்தீன், கலீல் ரஹ்மான் ஆகியோருடன் அதன் செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்கவும் கலந்துகொண்டார்.







தமிழ்நாடு, இலங்கை தமிழர் நல்வாழ்வுத்துறை அமைச்சர் செஞ்ஜி மஸ்தானினால் இலங்கை மலையக 'தோட்டத் தொழிலாளர் வீரப் போராட்டம்' எனும் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. அது மீன்வளத்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஸ்ணனிடமும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் 'இ -கிராம உத்தியோகத்தர்' திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்த கலந்துரையாடல்



(யாழ். நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத் தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் பிரஜைகளை மையமாகக் கொண்ட அரச சேவையொன்றை இலங்கையில் ஸ்தாபித்தல் தொடர்பான அரச கொள்கை யொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக, "இ-கிராம உத்தியோகத்தர்" கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர், தெல்லிப்பளை, சாவகச்சேரி, வேலணை, கரவெட்டி ஆகிய 5 பிரதேச செயலாளர் பிரிவுகள் இத்திட்டத்திற்காக முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இப்பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறித்த வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கலந்துரையாடலானது யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனின் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்திட்டத்தின்போது பொது மக்களின் வீடுகளுக்கு சென்று வீடுகள், பிரஜைகள் தொடர்பான தரவுகளினை பெற்றுக்கொள்வதற்காக தகவல் சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் பிரதேச மட்டத்தில் நியமிக்கப்பட வேண்டுமெனவும் தரவுகளை மென்பொருளில் பதிவேற்றம் செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு தரவுகள் சேகரிப்பது தொடர்பாக பொதுமக்களிற்கு விழிப்புணர்வூட்டுவதுடன் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் கடிதத்தினை பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபரின் கையொப்பத்துடன் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், உதவி மாவட்டச் செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம நிர்வாக உத்தி யோகத்தர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் விடய உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்த சோகச் சம்பவம்

(அநுராதபுரம் செய்தியாளர்)

கூரிய ஆயுதமொன்றினால் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கெக்கிராவ சந்தபான்கள பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கெக்கிராவ, விஹார மாவத்த, சந்தபான்கள பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தருவன் ஆரியதுங்க என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் குடும்பஸ்தர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவதினத்தன்று இரவு கொலை செய்யப்பட்ட சந்தேகநபர் இன்னுமொரு நபருடன் வீடொன்றில் மது அருந்திக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கொலை செய்யப்பட்ட நபரும் அவ்விடத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது, இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்று கைகலப்பாக மாறியுள்ளது. இந்நிலையிலேயே இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் அப்பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெக்கிராவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



இம்முறை நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மேல்மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் உள்ள திஹாரிய தாருஸ்ஸலாம் ஆரம்பப் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களுள் 9 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்கள். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# பிஸ்டலுடன் நபரொருவர் கைது

## துப்பாக்கி கொஸ்கொட தாரக்கவுக்கு சொந்தமானது என விசாரணைகளில் தகவல்



பாதாள குழு உறுப்பினர் கொஸ்கொட தாரக்க பல்வேறு குற்றச்செயல்களுக்காக பயன்படுத்திய பிஸ்டல் ரக துப்பாக்கி மற்றும் மெகசின் என்பவற்றுடன் நபரொருவர் விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் திட்டமிட்ட குற்றச் செயல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை பிரதேசத்தில் குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது ஒரு பிஸ்டல் ரக துப்பாக்கி, மெகசின் மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 9.56 ஓ 17 மில்லி மீற்றர் துப்பாக்கி ரவைகள் நான்கு என்பன சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த துப்பாக்கி கொலை மற்றும் கப்பம் கோருவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழு உறுப்பினரான கொஸ்கொட தாரக்கவுக்கு சொந்தமான துப்பாக்கி என்றும், குறித்த துப்பாக்கி திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவராக கெசெல் வத்தே தினுக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் அவரிடமிருந்து திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடையவரான தற்போது வெளிநாட்டிலுள்ள பைசர் நாநா வுக்கு வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் பைசர் நாநா என்பவர் மேற்குறிப்பிட்ட சந்தேகநபருக்கு பெற்றுக்கொடுத்துள்ளமை விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# தத்துவம் தங்கராசு



**எரிபொருள் நிலையமொன்றில் வரிசையில் நிற்கும் மக்களை தாண்டி வாகனமொன்றுக்கு எரிபொருள் நிரப்பச் சென்ற சீனப் பெண்மணி ஒருவரை சிங்கள இளைஞர்கள் திட்டி தீர்த்ததை காணொளியொன்றில் காண முடிந்தது.**

**சீனாவிடம் கடன் வாங்கி, சீனாவின் முதலீட்டால் வரும் நன்மைகளை அனுபவிக்கும் ஒரு நாடு இலங்கை. ஆனால், இப்போதுள்ள நிலைமை அவற்றையெல்லாம் மறக்கடிக்கச் செய்து இளைஞர்களை கோபத்துக்கு ஆளாக்கியுள்ளது.வெளிநாட்டு பெண்மணி ஒருவர் வந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்குமளவுக்கு நிலைமை நாட்டில் இல்லை.**

**ஆனால் இலங்கையை கைக்குள் போட முயன்ற சீனா, இலங்கை உள்நாட்டு போருக்கு ஆயுதங்களை அள்ளி வழங்கிய சீனா இன்று கவனிப்பாரில்லாமல் கிடக்கிறது. இந்தியாவுக்கு ஓடோடிச் சென்று உதவிகளை வாங்குகிறார்கள் இப்போதைய இலங்கை ஆட்சியாளர்கள். சீனாவுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது.**

# துறையடி இறங்குதுறையை புனரமைக்க கோரிக்கை



(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி - துறையடியிலுள்ள படகு சேவை இறங்குதுறை சேதமடைந்துள்ளதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

கற்பிட்டி பிரதேச சபையின் அனுமதிபெற்று தனிநபர் ஒருவரால் துறையடியிலிருந்து முகத்துவாரம் வரை மிக நீண்ட காலமாக இயந்திர படகு சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மக்கள் இயந்திர படகில் ஏறுவதற்காக பயன்படுத்தப்படும் பைபர் மூலம் தயாரிக்கப்பட்ட இறங்குதுறை உடைந்த நிலையில் காணப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், பெரிய வர்கள், சிறியவர்கள் என நாளாந்தம் பலர் முகத்துவாரத்திலிருந்து இறங்குதுறைக்கும், இறங்குதுறையிலிருந்து முகத்துவாரத்திற்கும் பயணம் செய்வதாக மக்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

இந்நிலையில் கற்பிட்டி துறையடியிலுள்ள இறங்குதுறை பழுதடைந்துள்ளதால், இயந்திர படகு சேவை ஊடாக போக்குவரத்து செய்வதற் காக வரும் மக்கள் விபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதிலும், குறித்த படகு சேவை இறங்குதுறை இன்னமும் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# 'பள்ளிவாசலுக்கு நல்வரவு' நிகழ்வு கொள்ளுப்பிட்டியில்









(அஷ்ரப் ஏ சமத்)

பள்ளிவாசலுக்கு நல்வரவு எனும் திட்டத்தின் கீழ் நேற்று (17) கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு 100 இற்கும் இடைப்பட்ட பல்லின சமூகத்தினர்களும் பாதிரியார்களும் வருகை தந்திருந்தனர். இந்நிகழ்வினை வெள்ளவத்தையிலுள்ள இஸ்லாமிய கற்கை மத்திய இன ஐக்கியத்தினை ஏற்படுத்தும் நிறுவனம் 10ஆவது தடவையாக இந் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இந் நிகழ்வுகள் இஸ்லாமிய கற்கை நிலையத்தின் தலைவர் எம். இல்யாஸ், உப தலைவர் அசீப் ஹுசைன், மௌலவி மூனிர் முல்பார் ஆகியோர் இணைந்து பள்ளிவாசல் உள் நிர்மாணம், தொழுகை முறைகள், வுலு செய்யும் முறை, அரபு எழுத்தனிகள், அல்-குர்ஆன் விளக்கங்கள், முஸ்லிம்களது உணவு முறைகள், மருதோண்டிக் கலைகள் போன்ற பல்வேறு கலாசார பழக்க வழக்க முறைகளை பல்லின சமூகத்தினர்களுக்கு அங்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் அங்கு வருகை தந்தவர்களது சந்தேகங்களுக்கு விளக்கமும் செயல்முறையும் காண்பிக்கப்பட்டது.

அங்கு வருகை தந்தவர்கள் விளக்க மளிக்கையில், நாங்கள் இன்று தான் வாழ்நாளில் முதல் முறையாக பள்ளிவாசல் ஒன்றுக்கு வருகை தந்து முஸ்லிம்களது மத வழிபாடுகள் குறித்த பல சந்தேகங்களுக்கு தெளிவுகண்டதாகவும் மத வழிபாடுகளை தெரிந்து கொண்டதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு எதிர்காலத்தில் ஏனைய சமூத்தினர்களுக்கும் நாட்டில் உள்ள ஏனைய பள்ளிவாசல்களுக்கும் இவ்வாறு வரவழைத்து பல சந்தேகங்களை தெரிந்து கொள்ளவும் இத்திட்டத்தினால் பல்லின மக்கள் வாழும் நாட்டில் இன ஐக்கியத்தினை ஏற்படுத்த இத் திட்டம் சிறந்ததொன்றாகும் என கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

# லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோயில் தொடர்பில் இந்துமத கலாசாரத் திணைக்களத்தினர் கலந்துரையாடல்





(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை, நுவரெலியா - ஹட்டன் பிரதான வீதியில் லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோயிலை பொதுமக்களின் வணக்கஸ்தலமாக பெற்றுத்தரக்கோரி பொதுமக்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு இணங்க, இலங்கை இந்துமத கலாசாரத் திணைக்களத்தினூடாக விசேட கலந்துரையாடலொன்று தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான பி.சக்திவேல், இலங்கை இந்து கலாசாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் கல்பனா, தலவாக்கலை - லிந்துலை நகரசபைத் தலைவர் லெட்சுமன் பாரதிதாஸன், நகரசபை உறுப்பினர்களான சுதாகரன், பாலமுரளி, முன்னாள் நகரசபை உறுப்பினர் ரொசான் இராஜசேகர், தலவாக்கலை கதிரேசன் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், தலவாக்கலை நகர வர்த்தகர்கள் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

200 வருட பழைமை வாய்ந்த தலவாக்கலை லோகி தோட்ட வழிப்பிள்ளையார் கோயில் அருகாமையில் அடையாளமாக திகழ்ந்த ஆலமரத்தை வெட்டி அகற்றிய குற்றத்துக்காகவும் தனிநபரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் குறித்த வழிப்பிள்ளையார் கோயிலை பொதுமக்களின் வணக்கஸ்தலமாக பெற்றுத் தருமாறு கோரியும் பிரதேச மக்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு ஏற்ப அங்கு வருகைதந்திருந்த இலங்கை இந்து மத கலாசாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் கல்பனா, பிரதேச மக்களின் கருத்துகளை கேட்டறிந்துகொண்டதுடன், இதுதொடர்பான அறிக்கை ஒன்றையும் உயர் அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# டீசல் ஏற்றிச் சென்ற லொறி பள்ளத்தில் பாய்ந்து விபத்து

## மூவர் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா நிருபர்)



எரிபொருள் நிலையத்துக்கு டீசல் ஏற்றிச்சென்ற லொறி ஒன்று நேற்று முன்தினம் (16) 70 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது அதில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் டயகம பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரப்பத்தனை - டயகம பிரதான வீதியில் ஆக்ரோவா பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம வெஸ்ட் தோட்டத்திற்கு சொந்தமான லொறி ஒன்று நேற்று முன்தினம் கொட்டகலை எரிபொருள் நிலையத்திற்கு சென்று டீசல் ஏற்றிக்கொண்டு அதிகாலை ஒரு மணியளவில் குறித்த தோட்டத்திற்கு செல்லும்போது அக்கரப்பத்தனை - டயகம பிரதான வீதியில் ஆக்ரோவா பிரதேசத்தில் வைத்து வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# குடும்பஸ்தரை காணவில்லை

(பதுளை நிருபர்)



பதுளை, மாணிக்கவள்ளி பெருந்தோட்டத்தைச் சேர்ந்த கணேசன் கலைச்செல்வன் என்பவரை காணவில்லையென அவரது மனைவி டி.பொன்மணியினால் கடந்த 15ஆம் திகதி பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

42 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், கட்டாரில் தொழில்செய்து வந்தவராவார். அந்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த நபர் பல மாதங்களாகியும், இதுவரை வீட்டுக்கு வரவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இவரது மனைவியும், மூன்று பிள்ளைகளும் தனித்துவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் வினவியபோதிலும் அவர் நாட்டுக்கு வந்து பல மாதங்கள் கடந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. அவர் தற்போது எங்கு இருக்கின்றார் என்பது தொடர்பில் தமக்கு தெரியாதென்றும் கூறப்பட்டதாக அவரது மனைவி தெரிவித்தார்.

மேற்படி கணேசன் கலைச்செல்வனை அறிந்தவர்கள், கண்டவர்கள் எவருமிருப்பின், பதுளை பொலிஸ் நிலைய குறித்த 055 2222222, 055 2222226 தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொண்டு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



ஊவா - வெல்லஸ்ஸ பிரதேசத்தில் 65,000 ஏக்கர் காணியை சிங்கப்பூர் சர்வதேச நிறுவனத்திற்கு வழங்குவதை உடனடியாக நிறுத்துமாறு கோரி ஊவா - வெல்லஸ்ஸ மனித உரிமைகள் பாதுகாப்பு முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த 15ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பிக்குகள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (படங்கள்: த.அசோக்குமார், எம்.செல்வராஜா)

# நியங்கொட கைத்தறி நெசவாலையை சீர்செய்து இயக்க நடவடிக்கை

## மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே




(கண்டி நிருபர்)

சுமார் 6 வருடங்களுக்கு மேலாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட நியங்கொட கைத்தறி நெசவாலையை புதுப்பித்து மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே நேற்று (17) தெரிவித்தார்.

மேற்படி கைத்தறி நெசவாலையை நேரில் சென்று பார்வையிட்ட பின் கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பலகோடி ரூபா பெறுமதியான கட்டடம் மற்றும் உபகரணங்கள் இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாக தெரிவித்த அவர், 1.5 ஏக்கர் நிலப்பரப்பும் புதர்களால் நிரம்பியுள்ளதாகவும் வெகு விரைவில் இதனை சீர்செய்து இயங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட மடுல்சீமை - ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய ஜீ. ரக்ஷனா (155) டி.ருக்ஷன் (161) ஆகியோர் மேற்படி புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர். மாணவர்களுடன் பாடசாலை அதிபர் என்.லிங்கராஜா, வகுப்பாசிரியர் வி.விக்னேஷ்வரம் ஆகியோரையும் காணலாம். (நடராஜா மலர்வேந்தன்)

# தொண்டமான் பயிற்சி நிலையத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




(தலவாக்கலை நிருபர்)

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின்கீழ் இயங்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் கடந்த ஆண்டு கற்கைநெறிகளை நிறைவுசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங் தலைமையில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங், அமைச்சின் பணிப்பாளர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி இருவர் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா நிருபர், மனுர சுதத் செல்லஹேவா)

அநுராதபுரம் பகுதியிலிருந்து சிவனொளிபாதமலைக்கு தரிசனத்துக்காக சென்று மீண்டும் தமது இல்லத்திற்கு திரும்பும்வேளையில், நேற்று முன்தினம் (16) மாலை சுமார் 30 பேர் வரை குளவிக்கொட்டுக்கு இலக்கானதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

நோட்டன் பிரிட்ஜ் பகுதியிலுள்ள விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் அருகே உணவகம் ஒன்றில் உணவு உண்ண சென்ற வேளையில், அங்கு ஒருசிலர் உணவு உட்கொண்டிருந்தபோதிலும் மேலும் சிலர் அப்பகுதியில் உள்ள கரையோரப் பகுதிக்கு நீராடச் சென்ற வேளையிலேயே அங்கு குளவிக்கொட்டுக்கு இலக்கானதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தார்.

இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். மேலும் சிலர் அப்பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வெளியேறியுள்ளதாகவும் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# விறகு தேடச் சென்ற முதியவர் சடலமாக மீட்பு

(பதுளை நிருபர்)

லுணுகலை பகுதியின் புளுகலை பெருந்தோட்டத்திலிருந்து விறகு தேடச் சென்ற முதியவரொருவர், நேற்று (17) சுமார் 5 மணித்தியாலங்களுக்குப் பிறகு சடலமாக மீட்கப்பட்டதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் 73 வயதுடையவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். தனது வீட்டிலிருந்து நான்கு கிலோமீற்றர் தொலைவிலுள்ள இறப்பர் தோட்டம் என்ற பகுதியில், விறகு தேடச் சென்றவரை பல மணித்தியாலங்களாக காணாததால் அவரது மனைவி உட்பட அயலவர்களுடன் சேர்ந்து தேடுதலை மேற்கொண்டனர்.

மேலும் லுணுகலை பொலிஸாருக்கு இது குறித்து அறிவிக்கவே, பொலிஸாரும் விரைந்து அச் சடலத்தை மீட்டனர். சடலம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக லுணுகலை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. லுணுகலை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை கல்வி வலயத்திற்குட்பட்ட அதிகஷ்ட பிரதேச பாடசாலையான குடாகங்க தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றிய சிவாஜிகணேசன் டிஷானி (183) புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.

(தலவாக்கலை நிருபர்)

# பலாங்கொடையில் பாலங்கள், வீதிகள் புனரமைக்கப்பட்டு திறந்துவைப்பு





(இரத்தினபுரி நிருபர்)



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள கிராமத்தின் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் பலாங்கொடை தேர்தல் தொகுதியில் அமைக்கப்பட்ட பாலங்கள் மற்றும் வீதிகள் நேற்று முன்தினம்(16) மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள கிராமத்தின் எழுச்சி வேலைத்திட்டம் கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதி தலைமையில் பலாங்கொடை தேர்தல் தொகுதியின் இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தோரவெலகந்த கிராமசேவகர் பிரிவிலுள்ள ராவணாகந்த வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச மக்களினால் வாய்மூலம் 84 கோரிக்கைகளும் எழுத்துமூலம் 190 கோரிக்கைகளும் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன. மேற்படி பிரதேசத்தில் கல்வி, சுகாதாரம், வீதி, காணி, விளையாட்டு, வனப்பாதுகாப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகள் மக்களால் முன்வைக்கப்பட்டதற்கமைய அவற்றை நிவர்த்திசெய்யும் முகமாக மேற்படி பிரதேசத்தின் அபிவிருத்திக்கென 02ஆயிரத்து 454 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதற்கமைய மேற்படி பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட நான்கு பாலங்கள் மற்றும் வீதிகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவல, பலாங்கொடை பிரதேச சபைத் தலைவர் சுனில் பிரேமசிறி, இம்புல்பே பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீலால் செனரத் உட்பட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கி தாய்மார்களின் போராட்டத்தை திசைதிருப்ப அரசாங்கம் முயற்சி

## வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தின் தலைவி உதயச்சந்திரா



(மன்னார் நகர் நிருபர்)

இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது அரசினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதாக அரசு தெரிவித்துள்ள கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, 12 வருடங்களாக நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ள போராடவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (17) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அன்றுமுதல் இன்றுவரை கூறிக்கொண்டு வருகிறோம் எமக்கு நஷ்டஈடு தேவை இல்லை என்று. வலிந்து காணாமலாக்கப்பட்ட எம் உறவுகள் குறித்து எங்களுக்கு நீதிதான் தேவை. அரசாங்கம் தரும் நிதி தேவை இல்லை.

இவ்வாறான சலுகைகளை தந்து தாய்மார்களின் போராட்டத்தையும் ஏக்கங்களையும் திசை திருப்ப இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

எமது உறவுகளின் உயிர் அரசுக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியாக இருக்கலாம். ஏனென்றால், அவர்கள்தான் எம் உறவுகளை பிடித்துக்கொண்டுசென்று சித்திரவதை செய்துள்ளனர். எங்களால் எமது உறவுகளை விலை மதிக்க முடியாது. எங்கள் உயிர் எமது பிள்ளைகள்.

நாங்கள் பிச்சை எடுத்தாவது ஒரு இலட்சம் இல்லை பல இலட்சத்தை எமது உறவுகளுக்காக தருகின்றோம். இந்த அரசாங்கம் சிந்தித்து செயல்பட வேண்டும்.

நாட்டில் இன்று எத்தனையோ பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. ஒரு நேர உணவு உண்பதற்கு உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு, டீசல், பெற்றோல் உட்பட எரிபொருள் தட்டுப்பாடு. ஒரு இறாத்தல் பாணின் விலை 130 ரூபாவாக உயர்ந்துள்ளது. இந்த மக்கள் இலங்கையில் வாழ்வதா அல்லது சாவதா என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நேரத்தில் அரசால் எவ்வாறு எமக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க முடியும்?

சர்வதேச ரீதியில் மீண்டும் மீண்டும் கடன்களை பெறுவதற்காகவும் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமை சார்ந்த இலங்கை விடயங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவும் அரசாங்கம் கபட நாடகம் ஆடுகிறது.

அதற்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒருபோதும் துணை போகமாட்டோம்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? என்ற உண்மையை மட்டும் எம்மிடம் கூறுங்கள்.

அரசாங்கத்தின் கபடத்தனத்தை இனிமேலும் எந்தவொரு தாய்மாரும் நம்பப் போவதில்லை.

நீங்கள் எமக்கு தருவதாக கூறிய ஒரு இலட்சம் ரூபா பணத்தை வைத்து தற்போது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணவுத் தட்டுப்பாடுகளையும் எரிபொருள் தட்டுப்பாடுகளையும் நிவர்த்திசெய்து இலங்கையில் மக்கள் பஞ்சம், பசி பட்டினி இல்லாமல் வாழ்வதற்குரிய வழிமுறைகளை செய்து கொடுங்கள் – என்றார்.

---

புதுமாத்தளனில்...

## இரு மாணவிகளைக் காணவில்லை

### பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதியில் நேற்று முன்தினம் (16) மாலைநேர வகுப்பிற்காகச் சென்ற இரு மாணவிகளைக் காணவில்லை என பெற்றோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தரம் 09இல் கல்விபயிலும், 14 வயதுடைய இரு மாணவிகளே இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

இதுதொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பாசையூர் பஸ் நிலையத்திலிருந்து சடலம் மீட்பு!

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியிலுள்ள பஸ் நிலையத்திலிருந்து காயங்களுடன் யாசகர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் நிலையத்தில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் சடலத்தினை மீட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்ப கட்ட விசாரணைகளில் சடலத்தில் காயங்கள் காணப்படுவதாகவும், குறித்த நபர் அப்பகுதிகளில் யாசகம் பெறுபவர் என்றும் , அவரது பெயர் விபரங்கள் அப்பகுதியினருக்கு தெரிந்திருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உடல் கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

# தக்க தருணத்தில் உதவிகளை மேற்கொள்வதே நட்புக்கு அழகு

### இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் மன்னாரில் தெரிவிப்பு





(மன்னார் நகர் நிருபர்)

ஒருவருக்கு கஷ்டம் வருகின்றபோது யார் வந்து தக்க தருணத்தில் உதவிகளைச் செய்கிறார்களோ அதுதான் நட்புக்கு அழகு. அந்த உதவியையே தக்க தருணத்தில் இந்திய அரசு மன்னார் மீனவர்களுக்கு தற்போது மேற்கொண்டுள்ளது - என இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜன் தெரிவித்தார்.

இந்திய அரசின் உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உலருணவுப் பொதிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (16) மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றுகையிலேயே இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருவருக்கு கஷ்டம் வருகின்றபோது யார் வந்து தக்க தருணத்தில் உதவிகளை செய்கிறார்களோ அதுதான் நட்புக்கு அழகு. தாயொருவருக்கு தனது குழந்தையின் தேவை யாரும் கூறாமல் எவ்வாறு தெரிகின்றதோ அவ்வாறுதான் இந்த உதவியும் அமைகின்றது.

தற்போது கொரோனா காலமாக இருக்கலாம். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு இருக்கலாம். இந்த நேரத்தில் குறித்த உதவியை தக்க தருணத்தில் செய்யவேண்டியுள்ளது.

இன்றைய நிகழ்வு ஓர் ஆரம்பமே. முதலீட்டிற்கும், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும் குறிப்பாக, மீனவ சமூகத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

அவற்றை சமீப காலத்தில் நிறைவேற்ற இருக்கின்றோம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் குறித்த உதவியை மீனவ சமூகத்திற்கு வழங்கியுள்ளோம். இதேபோன்று முல்லைத்தீவிலும் வழங்கவுள்ளோம். எமது கருத்துகள் மேடைப் பேச்சாக இருக்காது.

எமக்கு பக்கபலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார். அவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார். குறித்த நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்ற சமய தீட்சை நிகழ்வு



(யாழ். நிருபர்)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலுள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆசிரிய மாணவர்களுக்கான சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கலாசாலை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக் குருக்களை தீட்சா குருவாகக் கொண்டு நடைபெற்ற இந்நிகழ்வில், வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய பிரதமகுரு ராஜஸ்ரீ சிவ. கமலராஜ குருக்கள் சாதகாசாரியாராகக் கலந்து கொண்டார்.

இருபதுக்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் சமய தீட்சை பெற்றுக் கொண்டனர். அனைவருக்கும் பா. செல்வசேனக் குருக்கள் தொகுத்தெழுதிய சைவ அனுஷ்டான விதி என்ற நூலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இயற்றிய நித்திய கரும விதி என்ற நூலும் இலவசமாக வழங்கப்பட்டன.

---

# மறைந்த கலைஞர்களுக்கு மன்னாரில் அஞ்சலி









(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களில் மறைந்த கலைஞர்களுக்கு அஞ்சலி நிகழ்வும் மன்னார் மாவட்ட கலாசார பேரவையின் பொதுக்கூட்டமும் மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நேற்று முன்தினம் (16) மாலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்காக உழைத்து மறைந்த கலைஞர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் மாவட்ட கலாசார பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றன.

அதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் திருவள்ளுவர் விழாவும் ஓகஸ்ட் மாதமளவில் மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழாவும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தின் கலைஞர்கள் வயதெல்லை அடிப்படையில் மூன்று பிரிவுகளாக மதிப்பளிக்கப்படவுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் பிரதி மாவட்ட செயலாளர் வே.சிவராஜா, மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், நித்தியானந்தன் உட்பட பிரதேச கலாசார உத்தியோகத்தர்களும் கலைஞர்களும் கலந்துகொண்டார்கள்.

மேலும் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்த 3 கலைஞர்களுக்கு உறுதிப்பத்திரம் மன்னார் மாவட்ட செயலாளரால் வழங்கப்பட்டது.

---

# தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான மானியக் காசோலை வழங்கும் நிகழ்வு யாழில்








(யாழ். நிருபர்)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் மானியத் திட்டங்களை மேற்கொண்ட தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான மானியக் காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கரவெட்டி, புலோலி மற்றும் அம்பன் ஆகிய கமநல சேவை பிரிவுகளில் தென்னைப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளும் 115 பயனாளிகளுக்கு குறித்த கமநல சேவை நிலையங்களில் வைத்து மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கை முகாமையாளர் தே.வைகுந்தன், தென்னைப் பயிர்ச்செய்கை பிராந்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.ரவிமயூரன், தேசிய தமிழர் சக்தி யாழ். மாவட்ட இணைப்பாளர் ஜெ.சத்தியேந்திரன், கரவெட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.திலீப், புலோலி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திகதி 16.03.2022
புதன்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4708
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,022,480.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 5 0 0 4 7 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,419,158.00

Mega POWER
மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1056
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,621,320.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 242,141,574.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து X
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 01 25 67 75

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 738
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,531,120.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 11 13 15 35
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 102,938,670.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1224
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,471,500.00
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 7 7 7 1 0 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,599,927.20

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416





தெட்சண கைலாயம் எனும் திருகோணமலையில் அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவத்தின் 10ஆம் நாள் இரதோற்சவம் நேற்று (17) காலை 8.00 மணிக்கு இடம்பெற்றது. அம்பாள், பக்தர்களுக்கு அருளாட்சி புரிவதையும் மாணவிகளின் நடன நிகழ்வினையும் பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் - கிண்ணியா நிருபர்)

# நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு ஜனாதிபதியின் தவறான முடிவுகளே காரணம்

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் சாடல்

(கிண்ணியா நிருபர்)

ஜனாதிபதி எடுத்த தவறான முடிவுகளே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் - என திருமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரை தொடர்பாக நேற்று (17) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதியின் உரையின்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வுகள் எதனையும் முன்வைக்கவில்லை. வழமைபோன்று யுத்த வெற்றியில் ஆரம்பித்து கொரோனாவை காரணங்காட்டி கடந்த ஆட்சியாளர்களை குற்றஞ்சாட்டி உரையை முடித்தார்.

உண்மையில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம், ஜனாதிபதி 2019இல் ஆட்சிக்கு வந்தவுடன் தனது புகழுக்காக வரியை குறைத்து அரசின் 600 பில்லியன் வருமானத்தை இழக்கச்செய்ததே.



அதன்பின் செயற்கையாக டொலரின் பெறுமதியை 200ஆக கட்டுப்படுத்தி வைத்திருந்ததால் வெளிநாட்டிலுள்ள பணியாளர்கள் உண்டியல் முறை மூலம் பணப்பரிமாற்றம் செய்ததால் நாட்டுக்கு கிடைக்கவேண்டிய டொலரை இழக்க நேரிட்டது.

கொவிட் தாக்கத்தால் உயிரிழந்த உடல்களை வலுக்கட்டாயமாக எரித்ததால் மத்திய கிழக்கு நாடுகள் எதுவும் எரிபொருள் நிவாரணம் தர முனவரவில்லை. இப்போது எரிபொருளுக்காக இந்தியாவிடம் மண்டியிட்டு நாட்டின் ஒருபகுதியை இந்தியாவுக்கு விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதுபோன்று கொவிட் தாக்கமும் இதற்கு காரணம் என ஜனாதிபதி கூறியிருந்தார். உண்மையில் தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையில் மட்டுமே கொவிட் காலத்தில் டொலர் கையிருப்பு குறைந்துள்ளது. ஏனைய நாடுகள் அனைத்திலும் அதிகரித்தே காணப்படுகிறது. ஆகவே, இதுவும் அவர் கூறிய மற்றுமொரு தவறான உதாரணம். பொய்கள் கூறி ஆட்சிக்குவந்த ஜனாதிபதி மீண்டும் மீண்டும் பொய்களைக் கூறி தனது இயலாமையை மறைக்க முயல்கிறார்.

கடந்த 2020ஆம் ஆண்டே இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வுகூறி சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுமாறு அரசாங்கத்திடம் கூறியிருந்தோம். நாம் ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லமாட்டோம் என கூறியிருந்த அரசாங்கம், இன்று நாடு வங்குரோத்து அடைந்த பின் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல தீர்மானித்துள்ளது. அன்றே எமது ஆலோசனையை கேட்டிருந்தால் இன்று இந்த நெருக்கடிகளை தவிர்த்திருக்கலாம் - என தெரிவித்தார்.

# சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் காத்தான்குடி உணவகங்களுக்கு பூட்டு




(காத்தான்குடி நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் உணவகங்களுக்கான எரிவாயு விநியோகம் கடந்த இரண்டு நாட்களாக நிறுத்தப்பட்டுள்ளதால் மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசங்களில் அதிகளவான உணவகங்கள் மூடப்பட்டு வருவதுடன், உணவக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களின் தினசரி வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உணவுகளை பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலை தொடருமாக இருந்தால் உணவகத் தொழில் மற்றும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுவரும் மக்களின் அடிப்படைத் தேவை மற்றும் வாழ்வாதாரம் பாரிய கேள்விக்குறியாகிவிடும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஹெரோயின் போதைப்பொருளுடன் திருமலையில் இளைஞர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் இளைஞரொருவரை நேற்றிரவு (17) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கோமரங்கடவல, சமகி மாவத்தை பகுதியைச் சேர்ந்த லஹிறு சதறுவன் (26 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கோமரங்கடவல பொலிஸார் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது குறித்த வீதியால் பயணித்த இளைஞரை சோதனையிட்டபோது அவர்களிடமிருந்து 5 கிரேம் 600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

# திருக்குறளுக்கு பன்னாட்டுக் கவியரங்கம்; மட்டக்களப்பிலிருந்து நால்வர் பங்கேற்பு!

(கல்லடி நிருபர்)

திருக்குறளுக்கு இதுவரை நடத்தப்படாத முறையில் கவியரங்கமொன்று அண்மையில் உலக சாதனையாக மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு அதிகாரத்தின் பத்து குறள்களின் பொருளை விரிவாக மரபுக் கவிதையொன்றில் 133 கவிஞர்கள் படைத்தனர். இக்கவியரங்கில் இலங்கை, டென்மார்க், நெதர்லாந்து, கனடா, இந்தியா பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, மலேசியா மற்றும் ஆர்ஜென்டீனா என ஏறத்தாழ 15 நாடுகளிலிருந்து கவிஞர்கள் தாங்கள் விரும்பும் அல்லது தனிப்பட்ட அதிகாரத்தை எடுத்துக்கொண்டு அதன் கருப்பொருளை மரபுக் கவிதைகளில் படைத்தனர்.

இந்தியாவிலிருந்து 84 கவிஞர்கள் கலந்துகொண்டதுடன், இலங்கையிலிருந்து 10 மரபுக் கவிஞர்கள் பங்கேற்றிருந்தனர். இவர்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் க.மோகனதாசன், ஆரையம்பதியைச் சேர்ந்த செம்மொழிப் புலவர் மூ.அருளம்பலம், கல்லடி உப்போடையைச் சேர்ந்த கவிஞர் வில்லூர்பாரதி க.முரளிதரன் மற்றும் அரசடித்தீவைச் சேர்ந்த கவிஞர் பகீரதன் ஆகியோர் கலந்துகொண்டு தமது ஆற்றலை வெளிக்கொணர்ந்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியை உலக சாதனையாக தமிழ்மகள் இலக்கிய அமைப்பு, மல்ரி சிமார்ட் சொலுஷன் அமைப்பு மற்றும் ஓல் இந்தியா புக் ஒவ் ரெகாட்ஸ் ஆகியன இணைந்து நடத்தியிருந்தன.

அத்தோடு நிகழ்வின் ஒருங்கிணைப் பாளர்களாக ஆற்காட்டினைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் திருமதி பானுரே காவும், கனடாவைச் சேர்ந்த கவிஞர் அகணி சுரேசும் செயற்பட்டிருந்தனர்.

# அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் 2022 ஆண்டிற்கான அபிவிருத்திக் குழு தெரிவு



(அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்)

அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் 2022 நடப்பு ஆண்டிற்கான கலாசார அபிவிருத்திக் குழு தெரிவுசெய்யும் நிகழ்வு கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர் ஐ.எல்.றிஸ்வான் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. இதன்படி தலைவராக ஐ.எல்.றிஸ்வான், செயலாளராக ஏ.பி.நூறுல்லாஹ், பொருளாளராக ஏ.ஜி.ஏ.கபூர், பிரதித் தலைவராக எம்.ஏ.நஜிமுத்தீன், உப



செயலாளராக எழுகவி ஜெலீல் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக ஏ.எல்.நசீபா, சப்ரினா, யூசுப், ஏ.எல்.ஏ.லத்தீப், எம்.எல்.எ.கபூர், எம்.ஐ.நைசர் ஆகியோர் ஏகமானதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

# வீட்டில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது



(கனகராசா சரவணன்)

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் உள்ள மலையடிக் கிராமத்தில் வீடொன்றின் மூன்றாவது மாடியின் மேல் கஞ்சா செடிகளை வளர்த்துவந்த ஒருவரை இரண்டு கஞ்சா செடிகளுடன் நேற்று (17) கைதுசெய்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து நேற்று பகல் குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார், வீட்டின் மூன்றாவது மாடியில் பூச்சாடிகள் வளர்ப்பதுபோல் கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளார். இரண்டு கஞ்சா செடிகளை மீட்டதுடன், 33 வயதுடைய வீட்டின் உரிமையாளர் ஒருவரையும் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# திட்டமிட்டு விபத்தை ஏற்படுத்தி பணம் பறிக்கும் கொள்ளையர்கள்

## காரைதீவு மக்கள் அச்சத்தில்

(மாவடிப்பள்ளி நிருபர்)

காரைதீவில் பணம் பறிக்கும் கும்பல் ஒன்று திட்டமிட்டு செயற்பட்டு வருவதாகவும் மோட்டார்சைக்கிளில் பயணிப்போர் மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறும் கொள்ளையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பாதிக்கப்பட்டோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காரைதீவு பிரதான வீதியில் குறிப்பாக, காரைதீவு சந்திக்கும் மதுபான விற்பனை நிலையத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு மோட்டார்சைக்கிளில் பயணிப்போரிடம் குடிகாரக் கும்பலொன்று திட்டமிட்டு பணம் பறித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 3 அல்லது 4 பேர் அடங்கிய இந்த குடிகார கொள்ளையர்கள் இவ்வீதியால் குறைந்த வேகத்துடன் செல்வோர்மீது, அவர்களது கவனத்தை திசைதிருப்பும் வகையில் உறவுமுறைகளைக் கூறி திடீரென சத்தமாக அழைப்பதுடன், அதற்கு எதிர்த்திசையில் நிற்கும் மற்றைய குடிகாரத் திருடன் தனக்கு சேதம் ஏற்படாத வகையில் அந்த மோட்டார்சைக்கிளில் திடீரென பாய்ந்து வேண்டுமென்றே விபத்தை உண்டுபண்ணி, பின்னர் தான் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக பாசாங்கு செய்வதாக தெரிவிக்கின்றனர்.

இதன்போது அவ்விடத்திற்கு வரும் ஏனைய 3 குடிகார திருடர்களும் குறித்த நபருக்கு நஷ்டஈடு கொடுக்குமாறு வற்புறுத்தி, சட்டைப்பையில் இருக்கின்ற பணத்தையும் பறித்தெடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற சம்பவங்கள் இப்பகுதியில் கடந்த சில நாட்களாக அடிக்கடி இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். எனவே, இது விடயத்தில் காரைதீவு பொலிஸார் கூடிய கவனம் செலுத்துவதுடன், இவ்வாறு வேண்டும் என்று விபத்தை உண்டுபண்ணி பணம் பறிக்கும் கொள்ளையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பாதிக்கப்பட்டோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கல்முனையில் பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்கள் உருவாக்குவதற்கான முன்னாயத்த நடவடிக்கை








(பாறுக் ஷிஹான்)

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்கள் உருவாக்குவதற்கான முன்னாயத்த நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கல்முனை பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று (17) நடைபெற்றது.

இக்கலந்துரையாடலானது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இடம்பெற்றதுடன் சமூக பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம் வாஹீட் ஒருங்கிணைப்பில் 38 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார் இணைந்து பங்குபற்றினர்.

இதன்போது கல்முனை பிரதேசத்துக்கான பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்களை எவ்வாறு அமைப்பது, அதன் நோக்கம், இந்த குழுக்களில் எத்தனை பேரை உள்வாங்க வேண்டும், பெண்களின் பங்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. மேலும் இக்குழுக்களின் ஊடாக பிரதேசத்தில் குற்றச்செயல்களை தடுப்பது, போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையை கட்டுப்படுத்தல், சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு செய்தல் போன்ற செயற்பாடுகளை நோக்காகக்கொண்டு நாடு பூராகவும் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்தையும் மையப்படுத்தி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்குழுவில் சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்ற அதேவேளை, குற்றச்செயல்களுடன் சம்பந்தப்படாத பிரமுகர்கள் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட வேண்டும் என கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீரினால் இக்கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் உள்ளடங்கும் 38 கிராம சேவகர் பிரிவுகள் தோறும் அமைக்கப்படுகின்ற பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்களின் அங்கத்தவர்களுக்கு உத்தியோகபூர்வ அடையாள அட்டை ஒன்றும் வழங்கப்படவுள்ளன.

# அரச ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்





(மண்முனை நிருபர்)

இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் (16) மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது மாவட்டங்களுக்கு பொறுப்பான சங்க நிர்வாகிகள் மற்றும் வலயங்களுக்குப் பொறுப்பான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஷெஹான் திசாநாயக்க, சங்கத்தின் மேலதிக செயலாளர் நாலக டி சில்வா மற்றும் சங்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாண செயலாளர் ஜீவராசா ருபேஷன், சங்கத்தின் கிழக்கு மாகாணத்துக்கான செயலாளர், கோபாலசிங்கம் சுஜிகரன், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ந.காஞ்சீவன் மற்றும் சங்க செயற்குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் சமூக சேவையாளர்கள் உள்ளிட்ட பலர் கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகிகள் தெரிவைத் தொடர்ந்து ஆசிரியர்களின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினர். இதில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தடைப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இது தொடர்பில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஷெஹான் திஸாநாயக்க தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com


## போடியார் புலம்பல்!




**நாட்டு மக்களுக்காக கடுமையான முடிவுகளை எடுக்க தாம் உறுதிபூண்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டா ஐயா சொல்லி இருக்காரு எலுவா**

**இந்த மனிசன்ட கதய பாத்தால் மக்கள கடுமையான பஞ்சம்,பசி,பட்டினியப்போட்டு சாகடிக்கப் போறாரு போல.. நீங்களும் உங்கட அண்ணரும், தம்பியும் குடும்ப ஆட்சில கிழிச்சது போதும் உட்டுத்தள்ளிப்போட்டு பேசாம பதவிகள விலகித்து பாய சுருட்டித்து படுத்தாலே நாட்டு மக்களுக்கு ஏதும் நன்ம கிட்டும்.. சும்மா கத உட வேண்டாம்..என்ன நான் சொல்லுறது சரி எலுவா?**

# தாமரைக்குளம் ஷீரடி சாய் நாதரின் முதலாமாண்டு பெருவிழா ஆரம்பம்







(பாண்டிருப்பு நிருபர்)

அம்பாறை திருக்கோவில் தாமரைக்குளம் ஷீரடி சாய் கருணாலயத்தின் முதலாமாண்டு நிறைவுப் பெருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெற்று 31ஆம் திகதி நிறைவுபெறவுள்ளது.

23ஆம் திகதி அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் இந்தியாவின் காசி விஷ்வநாதர் ஆலயத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட லிங்கம் பிரதிஷ்டை செய்துவைக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் புனிதமான பூஜைகளும், அபிஷேகங்களும் இடம்பெறவுள்ளன.

இங்கு நாட்டின் நன்மை வேண்டி அணையா விளக்குகள் ஒன்பது நாட்களும் எரியவிடப்படுவதுடன், சிறப்பு பஜனை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. கருணாலயத்தின் விழாக்காலங்களில் தினமும் சிறப்பு பூஜையும், ஆராத்தியும், அபிஷேகமும் அதிகாலை 5 மணி, மதியம் 12 மணி, மாலை 4 மணி, இரவு 7மணி ஆகிய நேரங்களில் இடம்பெறவுள்ளது. அத்துடன் தினமும் மகேஸ்வர பூஜை, அன்னதானம் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா சீதா விவேக் தெரிவித்தார். கருணாலயத்தின் ஒன்பது நாட்கள் நடைபெறும் விசேட பூஜைகளும் ஒன்பது ஊர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் முதன் முதலில் ஷீரடி சாய்பாபாவிற்கென பிரமாண்டமான கருணாலயம் திருக்கோவில் பிரதேசத்தின் தாமரைக்குளம் எனும் பகுதியில் அமையப்பெற்றுள்ளது.

இவ் ஆலயத்தின் ஊடாக வடக்கு, கிழக்கில் வசிக்கும் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குடும்பங்களின் கல்வி, வாழ்வாதாரம் போன்ற மேம்பாட்டுக்கான உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. இதனை நோர்வேயில் வசிக்கும் பெரியகல்லாறைச் சேர்ந்த கருணாலயத்தின் தர்மகர்த்தா சீதா விவேக் குடும்பத்தினர் சிறப்பாக செய்துவருகின்றனர்.

திருக்கோவிலில் அமையப்பெற்றுள்ள ஷீரடி சாய் கருணாலயமானது கடந்தவருடம் ஷீரடி சாய் நாதரின் பிரதிஷ்டை மற்றும் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு செய்யப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் பிரம்மாண்டமான முறையில் அமைப்பெற்றுள்ள கருணாலயத்தின் அற்புதமும், மகிமையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது.







காரைதீவு அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர அலங்கார மகோற்சவத்தினை முன்னிட்டு நேற்று முன்தினம் (16) மாலை அம்பாள் வீதி வழியாக வீதியுலா வருவதையும் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டதையும் காணலாம்.

(காரைதீவு நிருபர்)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை, கருமலைஊற்று முஸ்லிம் வித்தியாலய மாணவி நுஸ்ரத் அலி அதா ஸரிஹ் 2021 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து பாடசாலை அதிபர் கே.எம்.எம். நவாஸ் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை ஆரம்பித்து 10 வருடகால வரலாற்றில் முதல் தடவையாக இந்த மாணவி சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை தேடிக்கொடுத்துள்ளார். கடந்த ஆறு வருடங்களாக மாணவர்கள் இந்த பரீட்சைக்கு தோற்றியபோதும் இதுவரை எவரும் சித்தியடையவில்லை. எனவே இந்த மாணவி பாடசாலையின் வரலாற்றில் சித்தியடைந்த முதல் மாணவி என்ற சாதனையை பெற்றுக்கொண்டுள்ளார். இது பாடசாலை சமூகத்துக்கு கிடைத்ததொரு உந்து சக்தியாகும்.

எனவே முதலாம் தரத்தில் இருந்து ஐந்தாம் தரம் வரையும் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

(மூதூர் நிருபர்)



இவ்வருடம் வெளியாகிய 05 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் தி/மூ/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக் கல்லூரி மாணவன் பரமேஸ்வரன் அர்த்தனன் 184 புள்ளிகளை பெற்று, மூதூர் கல்வி வலயத்தில் அதிகூடிய புள்ளிகளை பெற்று சாதனை படைத்துள்ளதோடு இதன்மூலம் தனது கிராமத்திற்கும், பாடசாலைக்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ளார்.

பல்வேறு வளப் பற்றாக்குறைகளுடன் காணப்படும் இப்பாடசாலை மாணவனின் வெற்றியானது பலராலும் பாராட்டப்பட்டு வருகின்றது.

இம்மாணவனின் வெற்றியில் உறுதுணையாக இருந்த கல்லூரி அதிபர் க.பாக்கியராஜா, கற்பித்த ஆசிரியர் ம.சிவகரன் மற்றும் நிர்வாகத்திற்கும் பெற்றோர்களும், கிராம மக்களும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

(வி.சுகிர்தகுமார்)

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி திருக்கோவில் கல்வி வலயத்தில் 133 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக வலய கல்விப்பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு கோட்டத்தில் 67 மாணவர்களும் திருக்கோவில் கோட்டத்தில் 52 மாணவர்களும் பொத்துவில் கோட்டத்தில் 14 மாணவர்களும் சித்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வலய மட்டத்தில் தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலய மாணவி கோகுலராஜ் திவான்ஜனா 184 புள்ளிகளை பெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டதுடன் ஆலையடிவேம்பு கோட்டத்தில் திருவள்ளுவர் வித்தியாலய மாணவி கிருசாந்தன் ஸபினாஸ்ரீ 179 புள்ளியினை பெற்று வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் கோட்ட மட்டத்தில் முதலிடத்தில் உள்ளார்.

இதேநேரம் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் 24 மாணவர்கள் சித்தியடைந்து வலயத்தில் அதி கூடிய மாணவர்கள் சித்தியடைந்துள்ள பாடசாலை எனும் பெருமையை பெற்றுள்ளது.

இந்நிலையில், திருக்கோவில் கல்வி வலயத்தில் கடந்த வருடம் 119 மாணவர்கள் சித்தியடைந்த நிலையில் இம்முறை 133 மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சில பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.



(கல்குடா நிருபர்)

2021ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஓட்டமாவடி சரீப் அலி வித்தியாலயத்தில் 32 மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டி எண்ணிக்கை அடிப்படையில் ஓட்டமாவடி கோட்டத்தில் முதலாம் இடத்தினையும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் இரண்டாம் இடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.சீ.எம்.அஜ்மீர் தெரிவித்தார்.

மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று சாதனை படைக்க அவர்களைத் தயார்படுத்திய ஏ.எஸ்.ஜெளபர், ஏ.எம்.எம்.பாயிஸ், ஏ.பி.பர்ஸானா ஆகிய ஆசிரியர்களுக்கும் ஆர்வத்துடன் கல்வி கற்ற மாணவர்களுக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோருக்கும், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கும் சகல வழிகளிலும் ஆலோசனை, வழிகாட்டல்களையும் வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர் ஆகியோருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் பாடசாலை அதிபர் ஏ.சீ.எம்.அஜ்மீர் தெரிவித்துள்ளார். அதேவேளை மட்டக்களப்பு மத்தி வலயம் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளதுடன், 459 மாணவர்கள் வெட்டுப்புள்ளியை பெற்றமை இவ்வலயத்தின் சிறப்பம்சமாகும்.



(மீராவோடை நிருபர்)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில் செம்மண்ணோடை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் 16 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எல்.எம்.அன்ஸார் தெரிவித்தார்.

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்தின் கீழுள்ள எமது பாடசாலையில் இம்முறை நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு 76 மாணவர்கள் தோற்றினர். அதில், 16 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதோடு, 48 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களான ஏ.எல்.எம்.சனூஸ், எம்.ஏ.யாகூப் மற்றும் ஒத்துழைப்புகளை வழங்கிய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் எம்.எல்.எம்.அன்ஸார் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

# சூரிய கலங்கள் மூலமான மின்னுற்பத்தியை ஊக்குவிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம்

## தேசிய கட்டமைப்பில் இணைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



வீடுகள் மற்றும் நிறுவனங்களை சூரிய கலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்புடன் இணைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவை உபகுழுவின் தலைவருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவற்றை தேசிய மின்கட்டமைப் பிற்குள் இணைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சூரிய கலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புடன் சேர்க்காமை மற்றும் தாமதப்படுத்துவது தொடர்பில் துரிதமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை உபகுழு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன் பிலவின் வீட்டிலும் சூரிய கலங்கள் பொருத்தப்பட்டுள்ளபோதிலும், அதனூடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புடன் இதுவரை இணைக்கப்பட வில்லை என்பது இது குறித்து மேற்கொள்ளப் பட்ட விசாரணையின்போது கண்டறியப் பட்டுள்ளது.

தேசிய மின்சார கட்டமைப்புக்கான இணைப்பை வழங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு மேல் சென்றுள்ளதாக அமைச்சரவை உபகுழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக அமைச்சரவை உப குழு கவனம் செலுத்தியதையடுத்து, அதனை தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார்.



கொழும்பு 13, ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று (17) இடம்பெற்றது.

# உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் 8ஆவது ஆண்டு சர்வதேச மாநாடு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பின் 8 ஆவது ஆண்டு சர்வதேச மாநாட்டு நிகழ்வு சென்னை சர்வதேச வர்த்தக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விழுப்புரம் வடக்கு தி.மு.க. மாவட்ட செயலாளரும் தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இந்தியாவின் VIP பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி ஜீ. விஸ்வநாதன், ஐ.டி.எம். நேசன் நிறுவனத் தலைவர் கலாநிதி வி. ஜனகன், சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவரும் அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவருமான அதி வண பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ, பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் ஐ. லியோனி, தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் உட்பட இந்த மாநாட்டில் உலகத்தில் பல



பாகங்களில் இருந்து தமிழ்த் தலைவர்களும் தமிழ் வர்த்தக பிரமுகர்களும் மற்றும் கல்வியாளர்களும் பங்குபற்றியிருந்தனர்.

உலகத் தமிழர் வம்சாவளி அமைப்பானது ஆண்டு தோறும் உலகம் முழுவதும் பரந்துவாழும் தமிழர்களை ஒன்றிணைத்து சர்வதேச மாநாடுகளை நடத்தி, திறமையான தமிழர்களை அடையாளப்படுத்துவதும், அவர்களுக்கான விருதுகளையும் வழங்கி வருகின்றது.

இலங்கை உட்பட உலகத்தில் பல நாடுகளில் இருந்து வந்திருந்த தமிழர்கள் பல்வேறு துறைகளில் விருதுகளைப் பெற்றுக்கொண்ட தோடு, பல்வேறு கலைநிகழ்வுகளும் ஒன்றுகூடல் களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# திருப்திகரமான தொழிலுக்காக ஊழியர்களுக்கு இடமளியுங்கள்

## தெமட்டகொடையில் ஜனாதிபதி தெரிவிப்பு

அனைத்து அரச ஊழியர்களுக்கும் திருப்திகரமான தொழிலுக்கு அவசியமான பின்னணி தயார் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக பதவி உயர்வு நடவடிக்கைகளில் நிலவுகின்ற பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கொழும்பு தெமட்டகொடையில் அமைந்துள்ள புகையிரத திணைக்களத்தின் பிரதான பொறியியல் தள உப திணைக்களம் மற்றும் மாளிகாவத்தை புகையிரதத் தளத்தை நேற்று முன்தினம் (16) முற்பகல் பார்வையிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிறுவனங்களின் நாளாந்த செயற்பாடுகளை அவதானித்த ஜனாதிபதி, தற்போதுள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஊழியர்களிடம் தகவல்களைக் கேட்டறிந்தார்.

புகையிரத என்ஜின்கள் மற்றும் வேகங்களை பரீட்சித்து, பொருத்தமான முறையில் பொறுத்துதல், பயணிப்பதற்காக இணைத்தல் ஆகியவை பொறியியல் தள உப திணைக்களத்தின் முதன்மைப் பணியாகும்.

வழக்கமான பழுதுபார்ப்புகளைச் செய்தல், இயந்திரப் பொறியியலாளர்களுக்கு மேம்படுத்துதல்களைப் பரிந்துரைத்தல், புதிதாகப் பயணிக்க இணைக்கப்படும் என்ஜின்கள் மற்றும் பெட்டிகளை பரீட்சித்து தரத்தை உறுதி செய்தல், புகையிரதப் பாதையில் ஏற்படும் விபத்துகள், தடம்புரள்வு அல்லது வேறு அனர்த்தங்களின் போது மீண்டும் சீர் செய்து புகையிரதத்தை பயணிக்கச் செய்தல் போன்றவை நிறுவனத்தின் பொறுப்புகளில் அடங்குகின்றன.

புகையிரதப் பெட்டிகளின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தை சுத்தம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை நிறுவனம் மேற்கொள்கிறது. கொழும்பில் உள்ள 05 பிரதான தளங்கள், 02 யார்டுகள் மற்றும் கொழும்புக்கு வெளியே சுமார் 15 தளங்களையும் திணைக்களம் கொண்டுள்ளது.

வெற்றிடங்களாகும் தொழில்நுட்பக் கடமைகளுக்கு, சிற்றூழியர்களை ஈடுபடுத்துதல் காரணமாக ஊழியர்களுக்கு மத்தியில் அதிருப்தி நிலை தோன்றியுள்ளதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். திறமையான இளம் தொழிலாளர்களை இலங்கை - ஜேர்மன் புகையிரத பயிற்சி நிறுவனம் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பி, பயிற்சி வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுத்து அதற்கேற்ப முறையான பதவி உயர்வு முறையை உருவாக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

எரிபொருள் போக்குவரத்து மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு புகையிரதங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகளைத் தொழிற்சங்க பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.





பழுதடைந்த புகையிரதப் பெட்டிகளை திருத்தும் பணியினை மேற்கொண்டுவரும் தெமட்டகொடை ஆராமய வீதியிலுள்ள தன்த்திரீ டேலர் (தனியார்) நிறுவனத்தின் இயந்திரவியல் தளத்தையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, அமைச்சுகளின் செயலாளர்கள், புகையிரதத் திணைக்கள பிரதானிகள் மற்றும் அதிகாரிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

# நாடாளுமன்றத்தில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட எம்.பிக்களின் விபரம் வெளியீடு

நாடாளுமன்றத்தில் கடந்த பெப்ரவரி மாதத்தில் மிகவும் சுறுசுறுப்பாக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் ஐந்து இடங்களில், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அலி சப்ரி, லக்ஷ்மன் கிரியெல்ல, பந்துல குணவர்தன, சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

manthri.lk ஆல் நடத்தப்பட்ட கணக்கெடுப் பின்படி, கடந்த பெப்ரவரியில் நாடாளுமன்றத்தில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட ஐந்து எம்.பி.க் களாக இவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.




### கொலைச் சம்பவங்கள்

#### சீதுவ

சீதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகலன்கமுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் வீடொன்றில் பெண்ணொருவரை கொலை செய்துவிட்டு வீட்டிலிருந்த பொருட்களை திருடிச்சென்ற சம்பவம் தொடர்பில் சீதுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குமாரதுங்க மாவத்தை, முகலன்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கொலைச் செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை சீதுவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

#### மாலபே

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாஹேன பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு நேற்று முன்தினம் வந்த நபர்கள் இருவர், வீட்டிலிருந்த பெண்ணொருவரின் கழுத்தை இருக்கி, அவரின் கணவரை கொலை செய்து விட்டு தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதாக மாலபே பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தலாஹேன, மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை மாலபே பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

#### மோதரை

மோதரை, மென்சந்த செவண பிரதேசத்தில் நேற்று முன்தினம் மோதரை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 519 கிராம் 780 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மோதரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீவலி ஒழுங்கை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 15 கிராம் 410 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### மாலபே

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஹான்தொட்ட வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேல் மாகாண தெற்கு குற்றவிசாரணை பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 07 கிராம் 460 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டு மாலபே பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மாலபே பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மாலபே பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### மாளிகாவத்தை

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 221ஆவது தோட்டம் பிரதேசத்தில், மாளிகாவத்தை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் 390 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மாளிகாவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### ஊவா குடாஓயா

ஊவா குடாஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாஓயா பிரதேச பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊவா குடாஓயா பிரதேசத்தை சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### வத்தளை

வத்தளை, கலகஹதுவ பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளையைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கோடாவுடன் நபரொருவர் கைது

#### ஹிரண

ஹிரண, பின்கேல்ல ஆற்றுக்கு அருகில் ஹிரண பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட 2,115 வீற்றர் கோடாவுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹிரண பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளடன் ஹிரண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### தங்கச் சங்கிலி திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய அறுவர் கைது

#### ராகம

ராகம பொலிஸ் அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் கிடைத்த தகவலுக்கமைய ராகம, பொல்கஹேன பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத கைகுண்டுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய தங்கச் சங்கிலிகளை திருடிய சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் சந்தேகநபர்கள் இருவரும், திருடிய பொருட்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் மூவர் ராகம, கந்தானை மற்றும் ஜா – எல ஆகிய பிரதேசங்களில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

படுவத்த, ராகம, கந்தானை மற்றும் ஜா – எல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 42, 40, 30, 32 மற்றும் 28 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ராகம, கந்தானை, வத்தளை மற்றும் ஜா – எல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 09 தங்கச் சங்கலி திருட்டுச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன் இவ்வாறு திருடப்பட்ட தங்கச் சங்கிலிகளுக்கு சமமாக 34 கிராம் நிறையுடைய 05 தங்க உருண்டைகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.கைதுசெய்யப்பட்ட முதலாவது சந்தேகநபர் தங்கச் சங்கிலிகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் மஹர, கம்பஹா, வெலிசர மற்றும் நீர்கொழும்பு ஆகிய நீதவான் நீதிமன்றங்களில் 15 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டுவருவதுடன், அவருக்கு எதிராக நீர்கொழுப்பு மற்றும் வெலிசரை ஆகிய நீதவான் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ராகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### சுப்பர் மார்க்கட்டுகளை உடைத்து திருடிய ஐவர் கைது

#### கல்கிசை

கல்கிசை குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதிவத்த பிரதேசத்தில் சுப்பர் மார்க்கெட் ஒன்றை உடைத்து திருடிய 14 சம்பவங்கள் தொடர்பில் சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 30, 34, 37, 38 மற்றும் 39 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் கிரிபத்கொடை, தெல்கொட, கல்கிசை, தெஹிவளை, பிலியந்தலை, மஹரகம, பம்பலப்பிட்டி, வெலிகட மற்றும் பண்டாரகம ஆகிய பொலிஸ் பிரிவுகளிலுள்ள சுப்பர் மார்க்கெட்டுகளை உடைத்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களினால் திருடப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்கு பயன்படுத்திய இரு முச்சக்கரவண்டிகள் மற்றும் திருடப்பட்ட பொருட்களை விற்பனை செய்ததால் உழைக்கப்பட்டதாக கருதப்படும் ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 600 ரூபா பணமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# உலக செய்திகள்



# போர் நிறுத்தக் கோரிக்கையை நிராகரித்தது ரஷ்யா

## “பேச்சு மிகவும் சிக்கலானது”- ஸெலென்ஸ்கி

## உக்ரைனில் களமிறங்கிய ரஷ்ய கடற்படை; பொதுமக்கள் தங்கியிருந்த திரையரங்கில் தாக்குதல்

“உக்ரைனில் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்ற சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க முடியாது'' என ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைனில் இன்று 23ஆவது நாளாக போர் நீடித்துவரும் நிலையில், உடனடியாக போரை நிறுத்த வேண்டுமென ரஷ்யாவுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்த கடந்த 22 நாட்களாக நடத்திய தாக்குதல்களில் பல்வேறு நகரங்களை கைப்பற்றிவரும் ரஷ்யப் படைகள் தலைநகர் கீவ்வை கைப்பற்றுவதில் மும்முரம் காட்டி வருகின்றன. போரை நிறுத்த அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் முயற்சித்துவரும் நிலையில், பொதுமக்களின் குடியிருப்புகள், மருத்துவமனைகள், பாடசாலைகள் மீதும் தாக்குதல்கள் நடைபெற்று வருவதால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டு வருகிறது.

தங்கள் நாட்டில் ரஷ்யா இனப்படுகொலை நடத்தி வருவதாக குற்றஞ்சாட்டிய உக்ரைன், போரை உடனடியாக நிறுத்த உத்தரவிடக்கோரியும் சர்வதேச நீதிமன்றத்தில் முறையிட்டது.

இது தொடர்பாக நெதர்லாந்தின் தி ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. இதில் போரை உடனடியாக நிறுத்துமாறு ரஷ்யாவுக்கு சர்வதேச நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்தது. இது உக்ரைனுக்கு கிடைத்த வெற்றி என்று அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவையடுத்து ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் ரஷ்யா, ''உக்ரைனில் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்ற சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க முடியாது'' என தெரிவித்துள்ளது.

### போர் நிறுத்த பேச்சுவார்த்தை மிகவும் சிக்கலானது

இந்நிலையில், ''ரஷ்யாவுடனான போர் நிறுத்த பேச்சுவார்த்தை மிகவும் சிக்கலானது'' என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் அமைதி பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டுள்ளன. ஏற்கனவே இரு நாடுகளிடையே நடைபெற்ற நான்கு கட்ட பேச்சுவார்த்தையில் சுமூக உடன்பாடு எட்டப்படாத நிலையில், போரை நிறுத்த சர்வதேச நீதிமன்றமும் உத்தரவிட்டிருப்பதால், விரைவில் போர் நிறுத்தம் தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யாவுடனான போர் நிறுத்த பேச்சுவார்த்தை மிகவும் சிக்கலாக உள்ளது எனவும், ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது கடினம் எனவும் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

### பத்திரமாக திரும்பிய 3 நாடுகளின் பிரதமர்கள்

கீவ் நகரத்தை கைப்பற்ற ரஷ்யப் படைகள் தொடர்ந்து வேகமாக முன்னேறிய நிலையில், அடுத்த சில நாட்களில் இந்த நகரம் வீழ்ந்து விடும் என கருதப்பட்டது.

இதைத் தொடர்ந்து அண்டை நாடுகளான போலந்து, செக் குடியரசு, ஸ்லோவேனியாவின் பிரதமர்கள் கீவ் நகருக்கு உயிரை பணயம் வைத்து சென்றனர். அவர்கள் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியை சந்தித்துப் பேசிவிட்டு, நேற்று நாடு திரும்பினர்.

சந்திப்பு குறித்து செக் குடியரசு பிரதமர் பெட்டர் பியாலா தெரிவிக்கையில்,

''உக்ரைனுக்கு உலக நாடுகள் உடனடியாக அதிகளவில் ஆயுதங்களை கொடுத்து உதவ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. உக்ரைன் படை நமது நாடுகளின் சுதந்திரத்துக்காகவும் போரிட்டு வருகிறது என்பதை உணர வேண்டும். எனவே, அந்த நாட்டை ஆதரிக்க வேண்டும்'' - என்றார்.

### கடற்படையை களமிறக்கிய ரஷ்யா

உக்ரைன் போரில் ஏற்கனவே விமானப்படை, தரைப்படை, பீரங்கிப் படை போன்றவற்றை ரஷ்யா பயன்படுத்தி வருகிறது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் முதல் முறையாக அது கடற்படையை பயன்படுத்தியது.

ஒடிசே நகரத்தின் தென் பகுதியிலுள்ள துஷ்லா நகரத்தின் மீது அசோவ் கடலில் நிறுத்தப்பட்டுள்ள போர்க்கப்பலிலிருந்து வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. அதேபோல், கருங்கடலில் முற்றுகையிட்டுள்ள போர்க்கப்பல்களிலிருந்து மரியுபோல் நகரத்தின் கடற்படை பகுதிகள் மீது வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

### பொதுமக்கள் தங்கியிருந்த திரையரங்கில் தாக்குதல்

உக்ரைனில் மரியுபோல் நகரத்தில் 1000இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கியிருந்த திரையரங்கில் ரஷ்யப் படைகள் குண்டு வீசி தாக்கியுள்ளமை பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நகரம் முழுவதும் ரஷ்ய விமானப் படைகள் குண்டு மழை பொழிந்தன. மரியுபோல் நகரில் 1000இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கியிருந்த திரையரங்கு ஒன்றில் ரஷ்ய இராணுவம் குண்டு வீசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யப் படைகள் தாக்குதலுக்கு அஞ்சி திரையரங்குகளில் தங்கியிருக்கும் மக்களை குறிவைத்து தாக்குவதாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், செர்னிகிவ் பகுதியில் உணவு வாங்க நின்றுகொண்டிருந்த மக்கள் சுடப்பட்டுள்ளனர்.



இதில் 10 பேர் உயிரிழந்துவிட்டனர். மரியுபோலில் மக்கள் தங்கி இருந்த திரையரங்கு ஒன்றில் வேண்டுமென்றே சக்தி வாய்ந்த குண்டை ரஷ்யா வீசியுள்ளது. ரஷ்யாவின் மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் அதிகரித்துவிட்டன'' - என்றார்.

மரியுபோல் திரையரங்கு மீதான தாக்குதலில் உயிரிழந்தவர்கள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

### தாக்குதலுக்கு நாங்கள் பொறுப்பு அல்ல - ரஷ்யா

தியேட்டரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலுக்கு நாங்கள் பொறுப்பல்ல என ரஷ்யா அதனை மறுத்துள்ளது.

மேலும், உக்ரைனிய போராளிகளான அசோவ் பட்டாலியன் அமைப்பினர் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கக்கூடும் எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. ஏற்கனவே உக்ரைனிலிருந்து பாதுகாப்பாக வெளியேறும் அந்த நாட்டு மக்களை போராளிகள் குழு தடுப்பதாக ஏற்கனவே ரஷ்யா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கார்க்கிவ் நகரத்திலும் ரஷ்ய படைகள் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் கட்டடங்கள் தீப்பற்றி எரிகின்றன. மரியுபோல், கார்க்கிவ் நகரங்களில் ரஷ்யப் படைகள் சுற்றி வளைத்துள்ளதால் சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். இராணுவ கட்டமைப்புகள் மட்டுமே குறிவைக்கப்படும் என்று முதலில் கூறி போரை தொடங்கிய ரஷ்யா, தற்போது பாடசாலைகள், குடியிருப்புகள், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தி வருவது உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

### மரியுபோலில் மட்டும் 2,300 பொதுமக்கள் பலி

உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோலில் ஏராளமான மக்கள் உணவு, தண்ணீரின்றி தவித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 10 நாட்களுக்கும் மேலாக ரஷ்யப் படைகளால் அந்த நகரம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

ரஷ்ய தாக்குதலில் மரியுபோல் நகரில் மட்டும் பொதுமக்கள் 2 ஆயிரத்து 300 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

மேலும் குடியிருப்பாளர்கள் உணவு, தண்ணீர், வெப்பம் மற்றும் மருந்துக்காக போராடி வருவதாகவும், உயிரிழந்தவர்களின் உடல்கள் சாலைகளில் கிடப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அத்தோடு உயிரிழந்தவர்களை குவியல் குவியலாக ஒரே குழியில் புதைக்கும் அவலமும் அங்கு இடம்பெற்றுள்ளது.

### காரும் பெற்றோலும் இருந்தால்தான் சாத்தியம்

''காரும் பெற்றோலும் இருந்தால் மட்டுமே மரியுபோலிலிருந்து வெளியேற முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது'' என உக்ரைனில் வசிக்கும் பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் வசிக்கும் அன்னா ரோமானிகோ என்ற பெண் பேசிய ஓடியோ ஒன்றை பிபிசி செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அன்னா ரோமானிகோ மரியுபோல் நகருக்கு வெளியே வசித்து வருகிறார். ஆனால், அவரின் பெற்றோர் மரியுபோல் நகரில் சிக்கியுள்ளனர்.

தற்போது மரியுபோல் நகரில் தொடச்சியாக ரஷ்யா தாக்குதல் நடத்திவரும் நிலையில், அந்த நகரின் அவலநிலையை அன்னா தனது ஓடியோவில் விவரிக்கிறார். அதில் அவர்,

“தொடர்ந்து தாக்குதல் நடந்துவரும் மரியுபோல் நகரில் என்னுடைய பெற்றோர்கள் சிக்கியுள்ளனர். கடந்த 10 மணிநேரமாக ரஷ்யப் படைகள் அங்கு குண்டுவீசி வருகின்றன. அங்கு வீடுகளின் வெப்பநிலை 4, 5 டிகிரி செல்சியசாக உள்ளது. நகரில் தண்ணீர், உணவு, மின்சாரம் எதுவும் இல்லை. வீட்டினை சூடேற்றவும் வழியில்லை.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளவும் வழியில்லாமல் என் பெற்றோர்களால் என்ன செய்ய முடியும்? கடைகள் நேற்றுவரை மட்டுமே திறந்திருந்தன. நகரின் சில பகுதிகளில் மட்டுமே தொலைத்தொடர்பு வசதி உள்ளது. மரியுபோல்வாசிகள் வெளியுலகைத் தொடர்புகொள்ள முடியாத அபாயமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொடர்ந்து குண்டுவீச்சு தக்குதல்களுக்கிடையில், தங்களுடைய சொந்த பாதுகாப்பில் மரியுபோலிருந்து வெளியேறி உக்ரைன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குச் செல்ல மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அப்படி வெளியேற உங்களிடம் காரும், அதில் பெற்றோலும் இருக்கவேண்டும். போகும் வழியில் பெற்றோல் நிரப்பிக்கொள்ள மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. கார் இல்லாத மக்கள் மரியுபோலிருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளனர்.

21ஆம் நூற்றாண்டில் இனப்படுகொலையின் சாட்சியாகவும், பலியாகவும் நானே மாறுவேன் என்று ஒருபோதும் நான் நினைத்ததில்லை” - என்று அவர் தெரிவித்துள்ளார்.

### சிறைபிடிக்கப்பட்ட உக்ரைன் மேயரை விடுவிப்பு

உக்ரைனில் கடத்தப்பட்ட மேயரை விடுவிக்க, ரஷ்யப் படைவீரர்கள் 9 பேரை விடுவித்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைனின் மெலிட்டோபோல் நகரைக் கடந்த வாரம் கைப்பற்றிய ரஷ்யப் படையினர் மேயர் இவான் பெடரோவைச் சிறைப்பிடித்துச் சென்றனர்.

அவரை விடுவிப்பதற்காக பேச்சு நடத்தியதில், பதிலுக்கு உக்ரைன் இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்ட ரஷ்ய வீரர்களை விடுவிக்க ரஷ்யா இராணுவம் கேட்டுக்கொண்டது. இந்நிலையில், மெலிட்டோபோல் மேயர் இவான் பெடரோவ் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கி கூற்றை மேற்கோள் காட்டி இன்டர்பேக்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஜப்பானை அடுத்தடுத்து உலுக்கிய சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள்

## சுனாமி எச்சரிக்கையால் பீதி; 4 பேர் பலி; 100 பேர் படுகாயம்; 20இலட்சம் மின்னின்றி பரிதவிப்பு





ஜப்பானில் அடுத்தடுத்து மூன்று இடங்களில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதுடன், அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கத்தில் சிக்கி 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அத்தோடு கட்டடங்கள் பல சரிந்துள்ளதுடன், வீதிகள் வீட்டின் சுவர்களில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் வடக்கு பகுதியிலுள்ள புகுஷிமா கடலோர பகுதி, டோக்கியோ மற்றும் ஹொன்சு தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. கடலுக்கடியில் 60 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் கடுமையான அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் சுமார் 20 இலட்சம் வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. புகுஷிமா கடலோரப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் 7.3 ரிச்டர் அளவில் பதிவாகியிருந்தது. அதிகபட்சமாக ஹொன்சு தீவில் 7.4 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேபோல், பாகிஸ்தானின் ஸ்கார்ட் பகுதி மற்றும் இந்திய எல்லைப் பகுதியான லடாக் பகுதியிலும் சிறிதுநேரம் நிலநடுக்கம் உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால், புகுஷிமா கடற்கரைப் பகுதிகளில் அலைகள் உயரமாக எழுந்து காணப்பட்டதால் அங்கு சுனாமிக்கான வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. நிலநடுக்கத்தால் புகுஷிமா பாரிய சேதத்தை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, ஷிரோஷி என்ற பகுதியில் சென்று கொண்டிருந்த அதிவேக புல்லட் ரயில், நிலநடுக்கத்தால் தடம் புரண்டுள்ளது. மேலும், பல்வேறு பகுதிகளில் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. பொது இடங்கள், வணிக வளாகங்கள் என கட்டுமான சேதம் பெருமளவிலுள்ளது. தொடர்ந்தும் அங்கு மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2021ஆம் ஆண்டிற்கான....

# உலக அழகியாக மகுடம் சூடிய போலந்தின் கரோலினா

2021ஆம் ஆண்டிற்கான உலக அழகியாக போலந்தின் கரோலினா பியலவுஸ்கா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருந்த உலக அழகி போட்டி, போட்டியாளர்கள் சிலருக்கு கொரோனா ஏற்பட்டதால் ஒத்திவைக்கப்பட்டது.

சான் ஜுவான் நகரில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் 40 நாடுகளின் அழகிகள் பங்கேற்றனர். இதில், 2019ஆம் ஆண்டு போலந்து அழகியாகத் தெரிவுசெய்யப்பட்ட கரோலினா பியலவுஸ்கா உலக அழகி பட்டத்தை தட்டிச் சென்றார்.

அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியான ஸ்ரீசைனி 2ஆவது இடத்தையும், ஐவரி கோஸ்டை சேர்ந்த ஒலிவியா யேஸ் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.





# தரவரிசையில் எழுச்சிகண்ட திமுத்



இந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் சதம் விளாசிய இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன, ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசையில் மூன்று இடங்கள் முன்னேறியுள்ளார். அதன்படி, திமுத் கருணாரத்ன தற்போது டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாவது இடத்தில் உள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட தரவரிசையில் அவர் பெற்ற மிகச் சிறந்த இடம் இதுவாகும்.

முன்னதாக ஆறாவது இடத்தில் இருந்த திமுத், பின்னர் எட்டாவது இடத்திற்கு பின்னடைவை சந்தித்தார். எனினும், இந்திய அணியுடனான இரண்டாவது டெஸ்ட்டில் அவர் பெற்ற சதத்துடன் மூன்று இடங்கள் முன்னேறி 781 தரவரிசை புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தைப் பிடித்தார்.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் மார்னஸ் லபுஷேன் 936 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாவது இடத்தில் இங்கிலாந்தின் ஜோ ரூட்டும், மூன்றாவது இடத்தில் அவுஸ்திரேலிய வீரர் ஸ்ரீவ் ஸ்மித்தும், நான்காவது இடத்தில் நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சனும் உள்ளனர்.

இதேவேளை, இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி 4 இடங்கள் சரிந்து 9ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு வரலாற்று சாதனைகளை தகர்த்த பாபர்



அவுஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் இரு வேறு வரலாற்றுச் சாதனைகளை படைத்தார்.

சுற்றுலா அவுஸ்திரேலிய – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில், நேற்று முன்தினம் நிறைவுக்குவந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிந்தது.

குறித்த போட்டியில் 505 என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி தாக்குப்பிடிக்காது என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஒற்றை நபராக பாபர் அஸாம் அணியை தூக்கி நிறுத்தினார். 425 பந்துகளை சந்தித்த அவர் 21 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 196 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். இந்நிலையில், இது பெரும் சாதனையாகியுள்ளது.

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 4ஆவது இன்னிங்ஸில் இதுவரை 3 வீரர்கள் மட்டுமே 400 பந்துகளுக்கு மேல் சந்தித்துள்ளனர். அந்தப் பட்டியலில் 3ஆவது இடத்தில் சுனில் கவாஸ்கர் 1979ஆம் ஆண்டு 443 பந்துகளை சந்தித்து இணைந்தார். தற்போது 4ஆவது வீரராக பாகிஸ்தான் அணித்தலைவர் பாபர் அசாம் 425 பந்துகளை சந்தித்து இணைந்துள்ளார்.

4ஆவது இன்னிங்ஸில் அதிக பந்துகளை சந்தித்தவர்களின் பட்டியல்;

492 – இங்கிலாந்து வீரர் மைக் ஆதர்டன் (1995)
462 – இங்கிலாந்து வீரர் ஹெர்ப் சுட்க்ளிஃப் (1928)
443 – இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் (1979)
425 – பாகிஸ்தான் வீரர் பாபர் அஸாம் (2022)

மேலும்m நான்காவது இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களை குவித்த அணித்தலைவர் என்ற சாதனையை பாபர் அஸாம் படைத்துள்ளார். முன்னதாக 1995ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் 4ஆவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கேல் ஆர்தர்டன் 185 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# ஐ.பி.எல். ஆட டெஸ்ட் தொடரை இழக்கும் தென்னாபிரிக்க வீரர்கள்



ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில், அந்த நேரத்தில் தென்னாபிரிக்க அணி சொந்த மண்ணில் பங்களாதேஷ் அணியுடன் டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. முதல் டெஸ்ட் மார்ச் 31 முதல் ஏப்ரல் 4ஆம் திகதி வரையும், 2ஆவது டெஸ்ட் ஏப்ரல் 8 முதல் 12 வரையும் நடைபெறவுள்ளன. இதனால் தென்னாபிரிக்க வீரர்கள் ஐ.பி.எல்லில் முதல் போட்டியிலிருந்து பங்கேற்பார்களா என்ற சந்தேகம் எழுந்திருந்தது.

இந்நிலையில், பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரிலிருந்து விலகி ஐ.பி.எல்லில் விளையாட ககிஸோ ரபாடா, அண்ரிச் நோட்ரியா, மார்கோ ஜோன்சன், ரைன் வான் டெர் டைசன், லுங்கி நிகிடி ஆகியோர் முடிவு செய்துள்ளனர். இதனால் அனுபவம் இல்லாத புதுமுக வீரர்களுடன் தென்னாபிரிக்க அணி பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

# ஆர்.சி.பி. அணித் தலைவர்களின் சாதனைகளும், வேதனையும்



கிரிக்கெட் ரசிகர்களின் நரம்பைச் சூடாக்கும் ஐ.பி.எல். 2022 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதிமுதல் மே 29ஆம் திகதிவரை கோலாகலமாக நடைபெறவுள்ளது.

ஆர்.சி.பி. அணிக்கு இதுவரை அணித்தலைவராக செயற்பட்டவர்கள் அனைவரும் மிகச் சிறந்த வீரர்கள். பல சாதனைகளைச் செய்தவர்கள். ஆனால், எவருமே சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொடுக்கவில்லை. தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நட்சத்திர அனுபவ வீரர் பாப் டு பிளஸிஸ் அந்த அணியின் புதிய தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதுநாள்வரை டிராவிட், கோஹ்லி உள்ளிட்ட எத்தனையோ ஜாம்பவான்கள் தலைமை வகித்தபோதிலும் அந்த அணியால் இதுவரை ஒருமுறை கூட சம்பியன் பட்டத்தை வெல்ல முடியவில்லை.

**1. ராகுல் டிராவிட்** (2008)

பெங்களூரைச் சேர்ந்த ராகுல் டிராவிட் அணியின் முதல் தலைவராக பொறுப்பேற்றார். இருப்பினும் அந்த சீசனில் அவர் தலைமையில் 14 போட்டிகளில் பங்கேற்ற அந்த அணி வெறும் 4 வெற்றிகளை மட்டுமே பெற்றதால் ப்ளே ஆஃப் சுற்றுக்கு செல்ல முடியாமல் பரிதாபமாக வெளியேறியது.

**2. அனில் கும்ப்ளே** (2009 - 2010)

அதன்பின் பெங்களூரைச் சேர்ந்த மற்றொரு ஜாம்பவான் அனில் கும்ப்ளேவை அந்த அணி நிர்வாகம் தலைவராக நியமித்தது. அவர் தலைமையில் அபாரமாக செயற்பட்ட அந்த அணி 2009இல் இறுதிப்போட்டி வரை சென்றாலும் சம்பியனாக முடியவில்லை. 2009, 2010 ஆகிய 2 வருடங்கள் செயல்பட்ட அனில் கும்ப்ளே தலைமையில் 35 போட்டிகளில் பங்கேற்ற ஆர்.சி.பி. 19 வெற்றிகளை பதிவுசெய்தது.

**3. கெவின் பீட்டர்சன்** (2009)

2009இல் இங்கிலாந்து நட்சத்திரம் கெவின் பீட்டர்சன் முதல் 6 போட்டிகளில் அணியின் தலைவராக செயற்பட்டார். அதில் அந்த அணி 2 வெற்றிகளை மட்டுமே பெற்றிருந்த நிலையில், இங்கிலாந்துக்காக அவர் விளையாடச் சென்றதன் காரணமாக அதன் பின் அனில் கும்ப்ளே தலைமை பொறுப்பை ஏற்றார்.

**4. டேனியல் வெட்டோரி** (2011-2012)

நியூசிலாந்தின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் டேனியல் வெட்டோரி கடந்த 2011 மற்றும் 2012 ஆகிய 2 வருடங்கள் அணியின் தலைவராக செயற்பட்டார். முதல் வருடத்திலேயே அசத்திய அவர், அணியை இறுதிப் போட்டிவரை அழைத்துச் சென்றபோதிலும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தது.

**5. விராட் கோஹ்லி** (2013 - 2021)

விராட் கோஹ்லியிடம் கடந்த 2013ஆம் ஆண்டு தலைமை ஒப்படைக்கப்பட்டது. அதன்பின் அபாரமாக செயற்பட்ட அவர், கடந்த வருடம் வரை 140 போட்டிகளில் அந்த அணிக்காக தலைமை வகித்து முழு மூச்சுடன் கிண்ணத்தை வெல்ல போராடினார். தனி ஒருவனாக போராடிய போதிலும் அவரால் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியவில்லை என்பது சோகமான செய்தியாகும்.

**6. ஷேன் வொட்சன்** (2017)

கடந்த 2017ஆம்ஆண்டு விராட் கோஹ்லி தலைமை பொறுப்பு வகித்த நிலையில் காயம் அடைந்த காரணத்தால் 3 போட்டிகளுக்கு அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சகலதுறை வீரர் ஷேன் வொட்சன் தலைவராக செயற்பட்டார்.

அதில் அந்த அணி ஒரு போட்டியில் மட்டும் வென்றமை குறிப்பிடத் தக்கது.




# இந்தியாவுடன் விளையாட விரும்பும் பாகிஸ்தான்

இந்தியா, பாகிஸ்தான் உட்பட 4 நாடுகள் பங்கேற்கும் வருடாந்த போட்டித் தொடர் குறித்த தனது திட்டத்தை பி.சி.சி.ஐ. தலைவர் சௌரவ் கங்குலியுடன் விவாதிக்க இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரமீஸ் ராஜா தெரிவிக்கையில், மார்ச் 19ஆம் திகதி டுபாயில் நடைபெறும் ஆசிய கிரிக்கெட் பேரவையின் கூட்டத்தில் பி.சி.சி.ஐ. தலைவர் சௌரவ் கங்குலியை அணுகி இந்தியா மற்றும் பாகிஸ்தான் உட்பட 4 நாடுகள் பங்கேற்கும் வருடாந்த போட்டித் தொடருக்கான திட்டத்தை விவாதிக்க இருக்கிறேன். இந்தியா - பாகிஸ்தான் போட்டிகளிலிருந்து ரசிகர்களை ஒதுக்கிவைப்பது நியாயமற்றது என்று நான் நினைக்கிறேன். இந்தத் திட்டத்திற்கு இந்தியா மறுத்தால் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துடன் ஆண்டுதோறும் முத்தரப்பு தொடரை ஆரம்பிப்பது பற்றி பாகிஸ்தான் யோசிக்கும் - என்றார்.



எனினும், பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய்ஷா கடந்த மாதமே ரமீஸ் ராஜாவின் இந்தத் திட்டத்துக்கான முன்மொழிவை நிராகரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காலிறுதிக்கு தகுதிபெற்ற நடால்: கிர்கியோஸூடன் பலப்பரீட்சை



கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் மற்றும் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ் ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

நான்காவது சுற்றுப்போட்டியொன்றில் ஸ்பெய்னின் ரபேல் நடால், அமெரிக்காவின் ரெய்லீ ஒபெல்காவை எதிர்கொண்டார். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரண்டு செட்டுகளுமே டை பிரேக் வரை நகர்ந்தன. இதில் விட்டுக்கொடுக்காமல் சிறப்பாக விளையாடிய ரபேல் நடால் 7-3, 7-6 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

இதேபோல் நடைபெற்ற நான்காவது சுற்றுப் போட்டியொன்றில் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவ்வும் அமெரிக்காவின் ஜோன் இஸ்னரும் பலப்பரீட்சை நடத்தினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை 6-3 என கிரிகோர் டிமிட்ரோவ் எளிதாக கைப்பற்றினார். டை பிரேக் வரை நீண்ட இரண்டாவது செட்டிலும் சிறப்பாக விளையாடிய கிரிகோர் டிமிட்ரோவ் 7-6 என செட்டை வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

அதன்படி இன்று நடைபெறும் முதல் காலிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் நிக் கிர்கியோஸ் - ரபேல் நடால் ஆகியோர் பலப்பரீட்சை நடத்துகின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7